திராவிடநாடு

2—9—62 | வார வெளியீடு | விலை 16 காசு

K. JANAKIRAMAN
No. 6, Arumuga Chetty Street,
C. N. K. Road, Chepauk,
MADRAS - 600 005.

"மோகமும்-தாகமும்"

—[கவிஞர் சுரா]—

இருண்ட வானுக்கு ஒளிநிலவாய்; நீரின்றி
வறண்ட பூமிக்குப் பெருமழையாய்; இழந்த
உரிமையை பெறுவதற்கே; உதயசூரியன்
உதித்தான் தென்னகத்தில் ஒளிபரப்பி!; மாந்தர்
விழித்தார்! வீறுகொண்டெழுந்தார்!; இனித்
தடுப்பார் யாரோ? அடுக்கடுக்காய்த் தோல்வி
எடுப்பவர் யாரோ? வீண் மமதையை மேலும்
விடுப்பாரா? விவேகமற்றவர்கள்!
நாட்டுப் பிரிவினையை நசுக்கிவிட, ஆள்வோர்
வேட்டு முறையை நடத்திடினும்; மக்கள்
வாக்குப் பிரிவினையால் நலம் காண்பார்!; அடிமை
மோகம் தலைக்கேறி ஆடுவோரே!; வான்
மேகம் கலைந்தழிவதுபோல்; ஆணவ
வேகம் குலைவதைப் பாரீர்!; கொடுந்
துன்பம் கோடி கொடிப்பினும்; சுதந்திரத்
தாகம் கொடிகட்டிப் பறப்பதைக் காண்பீர்!

கார் பொய்த்தது

—[நா. நாராயணன்]—

விரிந்த மார்பும் வீரத்தால் வீங்கிய தோள்களும் அவனுக்கே சொந்தம். கலை சொட்டும் முகம்; எதிலும் அலைபாயாத நிலையான உள்ளம். 'ஏகபத்தினி விரதர்கள்' அவனிடம் அடைக்கலம்.

அவள் மட்டுமென்ன! முற்றிக் கனிந்த நற்கனி; எவரையும் நின்று பார்க்கவைக்கும் நல்ல அழகு. காரன்ன கூந்தல்; கதிரன்ன ஒளிமேனி; பிறை நுதல்; மாவடுவைப் பிளந்தது போன்ற சின்ன உதடுகள்; பாலைப் பற்கள்; சிறுத்த இடை; நிறைந்த அழகி. உடலில் மட்டுமல்ல; உள்ளத்திலும்தான்.

வாழ்வில் ஒருவனையே கண்டாள். அவனையே தலைவனெனக் கொண்டாள்.

காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட பின் இன்பம் வேறெங்கே செல்லும்? இன்ப உலகை இங்கேயே கண்டனர். நாட்கள் ஓடின.

பிரிவுதான் காதலை வளர்க்கும் என்பதை நிரூபிக்க விரும்பியோ, களவியல் இன்பம் கண்டு களித்த பின், உலகத்தோடு ஒட்டிவாழப் பொருள் தேவை என்றுணர்ந்தோ, வெளியூர் செல்ல நினைக்கிறான், அவன்.

விடைபெற வருகிறான். சொல்லம்புப் படைகொண்டு தாக்குகிறாள். 'செல்லாமை உண்டானால் எனக்கு உரை' என்று சினத்தோடு பேசுகிறாள், அவள். சினம் நீக்கி, அவள் சிந்தையை மாற்ற வெகு சிரமப்படுகிறான். 'எப்படியும் கார்காலம் வருவேன் கண்ணே' என்று உறுதி கூறுகிறான்.

பிரியாவிடை கொடுக்கிறாள்; வேற்றூர் விரைகிறான்.

காலம் நகர்கிறது. காதலன் அருகிருக்கையில் 'விடியாய் இரவே' என்றாலும் விரைவில் ஓடுவதும், அவன் விலகி இருக்கையில் விடியா இரவாய், வெற்று இரவாய் இன்னும் இன்னும் நீண்டுகொண்டே நகர்வதுமாக இந்தக் காலம் காதலர்களுக்குச் செய்கின்ற கொடுமையை நினைக்கையில், அப்பப்பா! மறந்தும் கூடக் காதலின் வலையில் நாம் சிக்கி விடக்கூடாது என்றுதான் எண்ண விளைகிறது.

பால் நினைந்தூட்டும் தாய்ப் பறவைகள் தம் பார்ப்புகளை நினைந்து கூடு நோக்கி விரைகின்றபோதும், இளம் கலைமான்கள் கா நடுவில் தம் பிணைகளைத் தேடித் திரிகின்றபோதும், மாலை வரத் தவறினும் மணம் வீசத் தவறாத முல்லைக்கொடிகளைக் காண்கின்றபோதும், கன்றுகளை நினைந்து விரைந்து வீடடைகின்ற ஆனிரைகளின் அன்பையும் பாசத்தையும் எண்ணுகின்றபோதும், தன் காதலனையும் அவன் அளித்த இன்ப விளைவுகளையும் எண்ணி எண்ணி மனம் பேதலிக்கிறாள். மாலை நேரத்தின் இளந் தென்றலும் கண்ணைப் பறிக்கும் காந்தள் மலரின் மலர்ச்சியும் அவளது பிரிவுத் துன்பத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்கிறாள். கார் வருகையில் காதலனும் வந்துவிடுவான் என்ற இனிமையான எண்ணத்தில் இத் துயர்களை மறக்கிறாள்.

இவ்வாறே எண்ணங்களும் இரவுகளுமாக நாட்கள் கழிந்தன.

சூல்கொண்ட மேகக் கூட்டங்கள் வானமெங்கும் விரைகின்றன. இடியோசையின்இனிமைகேட்டுக் கான மயில்கள் மகிழ்ந்து ஆடுவது அழகுக்கு அழகு செய்வதுபோல அமைகிறது. ஊசிபோல் குத்துகின்ற பனியும் வாடையும் கலந்த காற்று வீசுகிறது. எப்போது மழை பொழியும் என்பதை நிர்ணயிக்க முடியாதவாறு கருமேகங்கள், மகவைப் பெறத் துடிக்கும் தாயைப்போல, தாம் கருக்கொண்ட மழைக் குழந்தையை உலகுக்களிக்கத் தயாராயிருக்கின்றன. ஆம்! கார் வந்துவிட்டது. அதன் அறிகுறிதான் இவை!

"ஆகா! இனிக் காலம் சுட்டிச் சென்ற என் காதலன் வந்துவிடுவார்" என்று மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது அவள் உள்ளம். வருபவரை எப்படி வரவேற்பது! முதலில் பேசுவது யார்! அவர் முகத்தை நோக்குவது எப்படி என்றெல்லாம் இன்ப நினைவுகளில் திளைக்கிறாள். முகம் களை கட்டுகிறது.

ஆனாலும், நாள் சென்றதே யொழிய அந்த நல்லவன் வந்தான் இல்லை.

வேனிற் காலத்தில் தண்ணிய சந்தனத்தைப் போன்று குளுமையையும், வாடைக் காலத்தில் வெப்பத்தை உள்ளடக்கிய தாமரை போன்று வெதுவெதுப்பையும் இளஞ் சூட்டையும் அளிக்கக்கூடிய காதற் கிழத்தியின் அருமையையும் அவசியத்தையும் அவன் அறிந்தவன்தானே? அறிந்தும் ஏன் வரவில்லை?

காத்திருந்து காத்திருந்து அவன் வரக்காணாத அவளோ "கார் வந்தால் நிச்சயம் அவர் வந்துவிடுவார். அவர் சொன்ன சொல் பொய்க்காது; எனவே கார்தான் பொய்த்துவிட்டது" என்று எண்ணுகிறாள்.

"ஏ கார்மேகமே! கார்காலத் தொடக்கத்தில் வருவதாக என் காதலர் குறித்துச் சென்றார். அதை நினைந்து நீ இப்பொழுது காரின் அறிகுறிகளைக் காட்டினால் 'இவள் உண்மையாகவே கார் தொடங்கி விட்டதாக எண்ணி, காதலர் வராமை குறித்து வருந்துவாள்; நாம் கண்டு மகிழலாம்' என்ற அன்பிலா நோக்கோடு பொய்யாக இடிக்கிறாய். காலமல்லாக் காலத்தே நீ செய்யும் இத் திருவிளையாடல்களை உண்மையென்றெண்ணிக் களித்து ஆடும் மடமயில் அல்லள் நான்" என்று கார்மேகத்தை நோக்கிச் சொல் மாரி பொழிகிறாள்.

"கார் பொய்க்கும் காதலன் பொய்க்கமாட்டான்" என்று எண்ணுமளவிற்கு, காதல் கொண்ட தலைமகனிடத்தில் நம்பிக்கையும் அவன் எண்ணத்தில் உறுதியும் கொண்ட இத்தகைய நற்றிணை மாதரை நம் தமிழ்க் குலத்தில் மட்டுமே காணமுடியும்.

வாழ்க அவள் காதல் உள்ளம்!

கார்வரு பருவம் என்றனர்மன், இனிப்
பேரஞர் உள்ளம் நடுங்கல் காணியர்
அன்பு இன்மையின் பண்பில பயிற்றும்
பொய்இடி அதிர்குரல் வாய்ப்செத்து ஆலும்
இனமயில் மடக்கணம் போல
நினை மருள்வேனோ! வாழியர் மழையே!

நற்றிணை—248

காசிபன் கீரனாரின் இப் பாடல் காதற் சிட்டுக்களுக்கு ஓர் நல் விருந்து.

இருபத்தொன்று

21] ஆண்டு சந்தா ரூ. 8 (2—9—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 1

"திராவிட நாடு" இதழ் தனது இருபதாவது ஆண்டை முடித்துக்கொண்டு, இருபத்தோராவது ஆண்டைத் தொடங்கியுள்ளது,

வழக்கமாக இருந்துவந்த மகிழ்ச்சி—இருபதாவது வயதை முடித்து இருபத்தோராவது வயதில் அடியெடுத்து வைக்கும் ஒரு இளைஞனுக்கு இருப்பதுபோல், இருபத்தொரு வயதை அடைந்துள்ள இதழுக்கு இல்லையே என்று கூறுமளவுக்கு அரசு தனது நடப்பின் மூலம் ஏற்படுத்திவிட்டது.

1. இதழின் ஆசிரியரை அடக்குமுறைப் பாணத்தை ஏவிச் சிறைக்குள் பூட்டிவைத்துவிட்டது.

2. இதழுக்குரிய காகிதக் கோட்டாவை உரிய காலத்திலும் போதிய அளவிலும் தராதிருப்பது.

முன்னது தமிழக அரசின் கெடுபிடியாகும்.

பின்னது தில்லி அரசின் மந்தப்போக்காகும்.

இவை காரணமாக இதழ் வெளியிடும் நிலை தடுக்கப்பட்டுவிடுகிறது.

காகிதம் இல்லாததால் ஒரு திங்களாக இதழை வெளியிடவே முடியவில்லை.

இனிமேலாவது இதழுக்குரிய காகிதக் கோட்டா உரிய காலத்திலும், போதிய அளவிலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதழை வெளிக்கொணரமுடியாத நிலையை உண்டாக்குவதும், ஆசிரியரை எழுதவிடாமல் சிறைக்குள் பூட்டிவைப்பதும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு அகமகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கலாம்.

ஆனால், திராவிடத்தில் வாழும் இலட்சோபலட்சம் மக்கள் இந்தப் போக்கினைக் கண்டு வரவேற்று மகிழ்வார்களா என்பதை மட்டும் அதிகாரமோகம் அறிந்து கொள்ளத் தடைசெய்துவிடுகிறதுபோலும்!

என்றபோதிலும் ஆளுங்கட்சியின் அடாதபோக்கினை மக்கள் மன்றம் மறந்துவிடுவதில்லை என்பதை அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பளிச்சிட்டுக் காட்டிவிட்டன.

திருச்செங்கோடும், சித்தூரும் ஆளுங்கட்சிக்குச் சரியான அடி கொடுத்துவிட்டது.

மக்கட் பண்புக்கு மதிப்புக்கொடுத்து நடப்பதே மக்களாட்சியின் (சனநாயக) மாட்சியாக இருத்தல் வேண்டும் என்று மக்கள் மன்றம் தீர்ப்பளித்துச் சரியான பாடமும் கற்பித்துவிட்டது.

உலகின் கவனத்தை ஈர்க்கும் இருபெரு வெற்றிகளை ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சிகளாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகமும், சுதந்திராக் கட்சியும் பெற்றுவிட்டன.

இந்த இருபெரு வெற்றிகளினாலும் நாம் அடைந்த மகிழ்ச்சி, நாமே மேலே குறிப்பிட்டிருக்கும் துயரத்தை மறைத்துவிட்டதென்றே கூறலாம்.

எனவே, "திராவிடநாடு" இதழுக்கு ஏற்பட்ட சில தொல்லைகளை நாம் பொறுத்துக்கொள்வதோடு, இனியும் இப்படிப்பட்ட இடையூறுகளையும், தொல்லைகளையும் அரசு தராதிருக்கவேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம்.

தொண்டர்களையும் தலைவர்களையும் அடக்குமுறையை ஏவிச் சிறையில் அடைத்துவிடுவதால் ஒரு அரசு தனது காரியத்தைச் சாதித்துவிடமுடியாதென்பதற்கும், ஒரு கட்சியையோ அதன் வளர்ச்சியையோ அழித்தும் குறைத்தும்விடலாம் என்று நினைப்பதையும் மேற்கொள்வதுகூடாது — தகாது என்பதற்கும் இது ஒரு பாடமாக அமைந்துவிட்டது.

எனவே, நமதுபணி பெரிது—மிகப்பெரிது—அதேபோது பயங்கர நிலைமைகளையும் சமாளித்துத் தீர வேண்டிய பெரிய பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே, நமக்குள்ளே இருக்கும் சிறுசிறு கருத்து வேறுபாடுகளையும், உட்பூசல்களையும் மறந்து ஆக்கப் பணியில் ஈடுபட அனைவரும் ஒன்றுபடுங்கள் என்று 21-ம் ஆண்டை அடைந்து, வாலிபப் பருவத்தைப் பெற்றுள்ள ஒரு வீரனின் நிலையில் மிளிரும் "திராவிடநாடு" விரும்பி வேண்டிக்கொள்கிறது.

"திராவிடநாடு" இதழின் வளர்ச்சியில் பங்கு கொண்டு பணியாற்றிவரும் விற்பனையாளர்கட்கும், சந்தாதாரர்கட்கும், கவிதைகள், கட்டுரைகள் வழங்கி ஊக்கமளிப்பவர்களுக்கும், அலுவலகப் பணிபுரியும் தோழர்கட்கும் நன்றியறிதலையும் பாராட்டுதலையும் தெரிவித்துத் "திராவிடநாடு" தனது இருபத்தோராவது ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது—வணக்கம். ○

அமைதி

—[நா. நாகமாணிக்கன்]—

அவன் பெயர் பஞ்சலிங்கம்; நெஞ்செலும்பு ஒடிய உழைக்கும் உழைப்பாளி; வஞ்சகமறியாதவன். ஆனால் வஞ்சகநெஞ்சுடையோரிடத்தும் பஞ்சினும் மெல்லிய இதயம் கொண்டோன். உழைத்துழைத்து அவன் சேமித்து வைத்துக்கொண்ட செல்வம், செல்வம்தான்.

செல்வம்—அவன் மகன். செல்வனுக்காக அவன் சேமித்து வைத்துள்ள ஒரே ஒரு பொருள் உண்டு; அதுதான் வறுமைச் செல்வம். உலகத்தோடு ஒட்ட ஒழுகலாதான் அவன்-தற்காலக் கவிஞனைப்போல. எத்துணையோ இன்னல்கள் அவனை வாட்டினவெனினும், அவன் தன் மகன் செல்வனைப் படிக்கவைக்க வேண்டும் என்னும் ஒரே எண்ணமுடையவனாக — விண்ணிற் பறந்தேனும் — கண்ணுடையர் என்பர் கற்றோர் என்னும் குறளுக்கு ஒப்பச் 'செல்வனை' வாழவைக்க எண்ணினான்.

பஞ்சலிங்கம் வாழும் ஊர்—பட்டணம் அல்ல; பட்டிலிங்கம் என்னும் சிற்றூர். பஞ்சலிங்கங்களும், பட்டினிலிங்கங்களுமாகச் சேர்ந்து, சிறந்து விளங்கிய ஊர். அவ்வூரில் பள்ளி ஏது? ஆதலின்... அருகே மூன்று கல் தொலைவு — மூங்கில் மடை எனும் மூதூர். அங்குள்ள ஊரில்—பள்ளியில் செல்வனைச் சேர்த்தான். செல்வனும் கற்று வந்தான்—நடந்து சென்று.

ஆரம்ப நிலை முடிந்து, செல்வன் உயர் வகுப்பிற்கு வந்தான். அதுபோது புத்தகங்கள் வாங்கவேண்டிய தொல்லை. இரவு பகல் எனப் பாராது அந்தக் கரவிலான் புத்தகங்களை வாங்கிக் கொடுத்துவந்தான்—செல்வனின் படிப்புக்கு. மூன்றாம் படிவம் படிக்கையில் செல்வனின் திறமைக்கெனப் பள்ளியில் ஒரு தொகை கிடைத்தது. பெற்ற தொகையைப் பெற்ற தந்தையிடம் கொண்டுவந்து தந்தான். செல்வனின் பிறந்த நாள்—அவன் தாயின் முகம்—பஞ்சலிங்கத்தின் நினைவுக்கு வந்தது; கண்ணீர் பொங்கியது.

செல்வன் பிறந்த ஆறாவதாண்டு-அவன் தாய்—தொல்லை நிறைந்த இவ்வுலகை விட்டு நல்லவர் வாழுமுலகு ஏகிவிட்டாள். அன்றுமுதல் தாயில்லாப் பிள்ளையாக—எனினும் தாயிடம் காணாப் பேரன்பையும் தந்தையிடமே கண்டு வளர்ந்தான் செல்வன். செல்வனிடம் பாசத்தை மிகவும் வைத்துவிட்டான் பஞ்சலிங்கம்.

செல்வனின் உயர்படிப்பு; சமைப்போரில்லை; வைகறை எழுந்து, உணவு செய்து, செல்வனுக்கிட்டுப், பகலுணவும் கொடுத்து அனுப்பிவிடுவான். தானும் புறப்பட்டுவிடுவான். நிரந்தர வேலையல்ல, கூலி. எந்த வேலையும்செய்வான்? செய்தே ஆகவேண்டும். வேறு வழி? நாடு முழுதும் இப்படிப்பட்ட நல்லவர்களைத்தான் நமதரசு பெருக்கிக் கொண்டு வருகிறதே!

செல்வன் பள்ளியிறுதித் தேர்வு எழுதினான். முடிவு வெளியாக இரு திங்களாகும். இரு திங்கள் என்ன செய்வது? முடிவு தெரிந்த பின் என்ன செய்வது? ஒரே குழப்பம்; இடைவெளிக் காலம்; தந்தையுடன் தானும் கூலியாகச் செல்ல விரும்பினான் செல்வன். ஆனால் பஞ்சலிங்கம் மறுத்துவிட்டான், பாசநெஞ்சமல்லவா!

வயதின் முதிர்ச்சி—பஞ்சலிங்கம் மிகவும் மெலிந்துவிட்டான். உழைக்கும் சக்தி ஓரளவே உண்டு-அவனுடலில். செல்வனின் தேர்வு முடிவுக்குப் பின் என்ன செய்வது? இதுவே பெருங்கவலை. மனக்கவலை கொண்டான். அவ்வளவே! உழைப்பு எங்கே?

தேர்வு முடிவு வெளியாகிவிட்டது. செல்வன் வெற்றி-நல்ல மதிப்பெண்களும் வாங்கி, அவன் படித்த பள்ளியிலேயே முதல்வனாக வென்றான். அந்த மகிழ்வை மட்டுமே தன் தந்தைக்கு ஈய முடிந்தது அவனால். மேலும் படிக்க இயலுமா அவனால்? வேலை தேடு படலந்தானே!

அரசாங்க வேலைக்கெனச் சில விண்ணப்பங்கள் விடுத்திருந்தான், வேலை தேடித்தரும் அலுவலகத்திலும் தன் பெயரைப் பதிவு செய்திருந்தான். அஃதன்றித், தனியார் துறை இலாக்காக்களில் வேலை தேடி நின்றான். செல்வன்-செல்வக் குடும்பத்திலே பிறந்தவனா? செல்வத் தோழர்களையுடையவனா? சிபாரிசுதான் யாரேனும் உண்டா? ஏதோ படிக்க வைத்தான் பஞ்சலிங்கமும் — செல்வனும் படித்தான்—அந்த அளவே! அவனுக்கு வழி காட்டி யார்? யாரும் வேண்டாம்! அரசாங்கம் வழி காட்டியதா? இல்லையே! வேலை தேடித்தரும் அலுவலகமாம்! அதன் மூலம் பல இடங்களுக்குச் சென்றான்" இன்டர்வியுவிற்காக. யார் இவனை எடுத்துக் கொண்டார்கள்? எண்ணினான், இதயம் கலங்கினான். துணிவு கொண்டான், அருகே ஆலையூரில்—எம். எல். ஏ. உறவினர் ஒருவர் மாடி கட்டிக்கொண்டிருந்தார் — கட்டிட வேலையில் போய்ச் சேர்ந்தான், அப்போதுதான்...............

செல்வனின் நிலையால் அவன் தந்தை மிகவும் பலவீனமடைந்து, உழைக்கும் திறனிழந்துவிட்டான். தன் மகன் எப்படி வாழவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தவன், இன்று, தன்னிலையிழந்துவிட்டான். வேதனையின் விம்மல்களாக அவன் வாய் சிலதை வெடித்தது. அவை மாற்றார்க்கு "உளறல்கள்" ஆயின. ஆம்! எந்நேரமும், "ஏ, மனிதா! உன்னிடம் பணமில்லையா? நீ உழைப்பாளியா? அன்றாடம் பொருள் தேடி வாழ்வு நடாத்துவோனா? உனக்கு ஒரு மகன் உண்டா? அவனைப் படிக்க வைக்க ஆசையா? வேண்டாம்! வேண்டாம்! உன்னாசை நிராசை ஆகிவிடும்! எல்லாரும் செல்லும் வழியில் செல்லாதே! படிப்பும் பணமும் ஒன்றிவிட்டது. இல்லை. பணம் படிப்பைவிட உயர்ந்தது. அதை நீ தேடிவை-உன் மகனுக்காக. அதுவே நீ செய்யவேண்டிய கடமை. தந்தையின் கடமை அவையத்து முந்தியிருப்பச் செயல்—அதற்கு வேண்டும் பணம். பின்பே படிப்பு" என ஏதோ உளறிக்கொண்டேயிருப்பான். இந்த உளறலைக் கேட்பது யார்? செல்லரித்த சுவர்கள்தான்.

★

சென்ற இதழ் தொடர்ச்சி...

. செஞ்ஞாயிறு.

ஹு ள்ளமில்லாத் தோழரே, உம் நிலைமையில் நான் சொல் வதைப் புரிந்துகொள்ள முடிகின் றதோ என்னவோ! பாவம் உம்மீது கான் எந்தக் குற்றச்சாட்டையும் கூற விரும்பவில்லை. உம்மை ஏவி விடும் அந்தக் கொடுங்கரத்தான் கூறுகின்றபடி நீர் நடந்து காட்டு கின்றீர்! ஆனால், ஒன்று சொல் கிறேன்! உம்மை ஏவிவிடுவோரிடம் மறந்துவிடாமல் சொல்லும்! இருட் தகையிலே என்னைப் போட்ட டைத்துவிட்டு வெளியுலகிலிருந்து என்னைத் துண்டித்து நிறுத்திவிட்டு, ஞாயிற்றின் ஒளியே வெளியில் கிடையாது என்று நீங்கள் சொல்ல வருகிறீர்கள்! ஞாயிறு எழுவதில்லை என்று நீங்கள் கூறிவிட்டு வாளா இருந்தால் போதாது என்று அதற் குச் சான்றுவேறு கூறுகின்றீர்கள்! அந்தச்சான்று வேடிக்கையான சான்று. பித்தம்பிடித்தவர்கள் கூடச் சொல்ல முன்வராத சான்று. கரை கின்ற காகங்களின் குரல் உன் காதில்வந்து விழவில்லை. அதற்குப் பொருள் என்ன? வெளியே காகங் கள் கரையவில்லை என்பதுதானே! காகங்கள் ஏன் கரையவில்லை? வெளியே பகல் இல்லை. அதனால் காகங்கள் கரையவில்லை என்று சொல்வதன் மூலம் என் உள்ளத் தைத் திருப்பப்பார்க்கின்றீர்! வெளியே மற்றப் புள்ளினங்களின் ஆர்ப்பொலி கேட்கவில்லை என் கிறீர்! கொக்கரக்கோ வென்று கூவுகின்ற சேவல் வந்து குரல் கொடுக்கவில்லை என்கிறீர்! இவை யெல்வாம் வெளியே பகல் இல்லை! செஞ்ஞாயிற்றின் சிறப்பொளியை இனிக் காணவே முடியாது! உல குக்கெல்லாம் இனி எங்களால்தான் ஒளிதரப்படவேண்டும்! எம்மைப் பகைத்துக்கொண்டு நிற்போர் யாருக்கும் இனி ஒளியைக் காட் டவே மாட்டோம்! ஒளியைக் காண வேண்டும் என்றால், எங்கள் வழி நீங்கள் வரவேண்டும்! என்றெல் லாம் எடுத்துச் சொல்வதன்மூலம் என் எண்ணத்தைத் திருப்பமுடியும் என் நம்பிக்கையைக் குலைக்கமுடி யும் என்று எதிர்பாக்கிறீர்கள். ஆர்க்கின்ற புள்ளினத்தின் ஒலி வந்து எட்டாத இடத்திலே என்னைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் புள் ளினமே ஆர்ப்பதில்லை என்று புகன்று வெல்லப்பார்க்கின்றீர்கள்! காதுக்கெட்டிய தொலைவுவரை

கனகு

சேவலிருந்து கூவாதபடி சுற்றுப் புறத்திலுள்ள சேவல்களையெல்லாம் அழித்தொழித்துவிட்டு இப்போது சேவலே கூவுவதில்லை என்று புகல வருகின்றீர்கள். ஒளியே உங்கள் ஆளுகையில் என்கிறீர்கள்! அதனை அடக்கி அடிமைப்படுத்திவிட்ட தாகக் கூறுகிறீர்கள்! இது ஆன்ற றிந்தோர் நம்பமுடியாத கூற்று. இனியேனும் தெளிந்துகொள்ளுங் கள். ஒளியின் தாக்குதலிலிருந்து வேண்டுமானால் நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்! ஒளியை உங்கள் விருப்பப்படி வேண்டுமானால் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்! ஆனால் ஒளியினையே இல்லாது செய்ய முடி யாது. ஒளியில்லையென்றால், காற்று இல்லை. காற்றில்லை என்றால் இயக் கம் இல்லை; ஒலி இல்லை. பேசுதல் நிகழாது. உணர்தல் முடியாது. உயிர்த்தலுமில்லை. மண்ணுலகு ஒரு வெற்றுப் பொருளாகிவிடும். இங்கே நான் இருக்கமாட்டேன் என்று மட் டும் எண்ணிவிடாதீர்! நீரும் இருக்க மாட்டீர்! வேறுயாரும் இருக்கமாட் டார்கள்! இது அடிப்படை உண்மை. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளமாட்டாது என்னிடம் பொய்புகல வருகின்றீர்களே எத் துணை பேதைமை!

‘இன்னொன்றும் சொல்கிறேன். இதை மறந்துவிடாமல் உம்முடைய தலைவன், அந்த உணர்வில்லாக் கொடுங்கரத்தானிடம் போய்ச் சொல்லிவிடும்! என் போன்றோர் சிலரை, அதாவது ஆயிரக்கணக் கானோரை இங்கே கொட்டடியிற் கொண்டுவந்து அடைத்துவிட்டால், எங்கள் கொள்கை மாறிவிடும், மாய்ந்துவிடும் என்று மனப்பால் குடிக்கின்றீர்கள். அதன் விளைவு நீங்கள் எதிர்பாராத விளைவாகவே முடியும் என்பதை நன்றாக நினைவு வைத்துக்கொள்ளும்படி சொல்லும்! உங்களுக்கு இப்போது அதிகார மிருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வேண்டுமானால் இங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அத்தனை பேரையும் கொலை செய்து விடக்கூட முடியும். அப்படி எங் களை எல்லாம் கொலை செய்து விட்டபின் எங்கள் கொள்கையை யும் அழித்துவிட்டதாக நீங்கள் எண்ணுவீர்களானால், அது தவறான கணக்காகத்தான் முடியும். எப்படி ஞாயிற்றின் பேரொளியை எங்க ளிடமிருந்து மறைத்து ஞாயிறே கிடையாது என்று நீங்கள் கூறித் திரியும் கூற்று உங்கள்பால் தோல்வி யைக் கொண்டுவந்து குவித்து விட்டுளதோ, அப்படியேதான் எங் கள் உயிரைப் பறிப்பதன் மூலம்

எங்கள் கொள்கையை நீங்கள் அழித்தொழிக்க முயல்வதும் முடியும். எங்கள் கொள்கை உங்கள் கண்களில் பட்டுக்கொண்டிருக்கும் எங்களோடு மட்டும் நிற்கிறது என்று நீங்கள் முடிவு கட்டிவிடாதீர்கள். அது இந்த நாட்டில் உண்மை உணர்வு யார் யாரிடம் இருக்கின்றதோ அவர்கள் உள்ளத்தில் எல்லாம் நிலை பெற்றுக்கொண்டு விட்டுளது. இனி அதனை அழிக்க வேண்டுமானால் இந்த நாட்டில் உண்மை உணர்வுள்ளார் ஒருவர் கூட எஞ்சாது அத்தனை பேரையும் அழித்தால்தான் அது சாத்தியமாகும். முதலில் உண்மை உணர்ருள்ளார் அவ்வளவு பேரையும் உங்களால் தேடிப் பிடித்துவிட முடியாது. ஏனென்றால் உண்மை உணர்வு என்பது மாந்தர் அனைவரிடத்திலும் ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு இடத்தில் ஒளிந்து கொண்டுதான் இருக்கின்றது. உங்களிடத்தில்கூட அது உண்டு என்பதை நீங்களே ஆழச் சிந்தித்தால் கண்டு கொண்டுவிடலாம்! எம் போன்றாரிடத்தில் அந்த உண்மை உணர்வு தன் இயல்பு மாறாத நிலையில் வெளித்தோற்றம் காட்டி இயங்கிக் கொண்டேயிருக்கின்றது. உம் போன்றாரிடத்தில் அது பாய்ந்துவிட்டது போல் அடக்கங்காட்டி, மறைந்து, ஒளிந்துகொண்டு மயங்கிக் கிடக்கின்றது. சமயம் நேரும் போது எல்லாரிடத்திலும் உள்ள உண்மை உணர்வு கிளர்ந்து எழத்தான் செய்யும்.

ஆகவே எங்களை வேண்டுமானால், உங்களிடம் அதிகாரம் இருக்கின்ற காரணத்தால், ஆட்சிப் பலகையில் நீங்கள் வீற்றிருக்கின்ற காரணத்தால் அழித்தொழித்துவிட முடியும். ஆனால் எங்கள் கொள்கையை உங்களால் அழிக்கமுடியாது. எங்கள் கொள்கையை நீங்கள் அழிப்பதென்பது செஞ்ஞாயிற்றின் திறனை நீங்கள் அழிக்க முனைவதற்கே ஒப்பாகும்; செஞ்ஞாயிறு இல்லையென்றால் நீங்களும் இல்லை என்பதை நான் திரும்பவும் சொல்ல வேண்டுவதில்லை. இனி நீங்கள் செய்யவேண்டுவதெல்லாம் நல்லுணர்வோடு இரண்டறக் கலந்து போய்விட்ட எங்கள் கொள்கையை நீங்கள் எதிர்ப்பதிலிருந்து விடுபடுவது ஒன்றேதான். மருள் நீங்கித் திருந்துவது ஒன்றேதான், இன்றேல் உங்கள் அழிவுக்கு நீங்களே காலத்தை விரைந்தழைத்துக் கொண்டு நிற்கிறீர்கள் என்றுதான் பொருள். உண்மையை உணர்வீர்! நன்மை வழி வருவீர்!"

"இவ்வளவும் அவர் சொன்னார். அவர் சொன்ன இந்தச் செய்திகளுக்கு,கருத்துக்குள்ள பொருள் என்று நானும் சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கிறேன், ஒன்றுமே புலப்படவில்லை எனக்கு. உங்களுக்குத் தெரியுமே! அவர் சொன்னதற்குப் பொருள் என்ன? அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?"

உள்ளமில்லான் இப்படிச் சொன்னதும் கொடுங்கரத்தானுக்குத் தலைகால் புரியாத சினம் மூண்டுவிட்டது. அந்தப் பெருஞ் சினம் காரணமாக உள்ளமில்லானை அடிப்பதற்குத் தன் கொடுங்கரத்தை ஓங்கியே ஓங்கிவிட்டான் அவன்.

"ஆண்டவனே, ஆண்டவனே!" என்று கூச்சல் போட்டுக்கொண்டு கொடுங்கரத்தானின் அடி தன்மீது விழாமல் ஒதுங்கி ஓடி நின்றான் உள்ளமில்லான்.

"இவ்வளவு தூரம் அவன் சொல்லிக்கொண்டு வரும்வரை அவன் வார்த்தையை நீர் கேட்டுக் கொண்டா நின்றீர்?"

"வேறு என்ன செய்வது! நான் இப்போது அவர் என்னிடம் கூறியதை உங்களிடம் சொல்லும்போது நீங்கள் அது முடியுமட்டும் கேட்டுக் கொண்டே நிற்கவில்லையா! அப்படித்தான் நானும் கேட்டுக்கொண்டு நின்றேன். ஆனால், ஒரு வேறுபாடு. அவர் என்ன சொல்கிறார் என்பதை நான் புரிந்துகொள்ளாமலே கேட்டுக்கொண்டு நின்றேன். நீங்கள் அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றையும் புரிந்துகொண்டே கேட்டுக் கொண்டு நின்றிருக்கிறீர்கள்."

"சேச்சே! என் திட்டத்தையெல்லாம் நீரே குலைத்துவிடுவீர் போலிருக்கிறதே! கடைசியில் எல்லாருமாகச் சேர்ந்து எல்லாப் பழியையும் என்மீதே போட்டுவிடுவீர்கள் போலிருக்கிறதே! கூட இருந்தே குழி தோண்டிவிடுவீர்கள் போலிருக்கிறதே!

"இதோ பாரும் உள்ளமில்லான்! இனி அந்தப் பயல்கள் ஏதாவது உம்மிடம் சொல்ல வந்தால் அவர்கள் சொல்கின்ற ஒரு வார்த்தையைக்கூட நீங்கள் கேட்டுக் கொண்டு அங்கே நிற்கக்கூடாது! மொத்தத்தில் அவர்களிடம் இனிப் பேச்சே கொடுக்கக்கூடாது! தெரிகின்றதா?" என்று மிரட்டும் குரலிலே கூறிவிட்டு "இனி நீர் போகலாம்!" என்று உரக்க கத்தி மேசையை ஓங்கித் தட்டுகிறான் கொடுங்கரத்தான்.

விட்டால் போதும் என்று வெளியே ஓடி வருகிறான் உள்ளமில்லான்.

6. வம்பளப்பான்

'இந்தத் தடவையோடு இந்த நல்லிதயக்காரர்கள் இல்லையென்ற நிலையை உண்டாக்கிவிடவேண்டும். யார் என்னைப்பற்றி என்ன கூறினாலும் சரி. என் நிர்வாகத்தைப் பற்றி எத்தனைபேர் குறைகூறிக் கொண்டு எதிர்த்து வந்தாலும் சரி. என் செயல்கள் கொடுமை நிறைந்தவை, நீதிக்கும், நேர்மைக்கும் புறம்பானவை என்று எவர் வந்து பழி சொன்னாலும் சரி! இந்தத் தடவையோடு இரண்டில் ஒன்று—இரண்டில் ஒன்று என்ன! அந்த நல்லிதயக்காரர்கள் இருக்குமிடம் தெரியாமற் பூண்டற்றுப் போய்விட வேண்டும். என்னைக்கேட்டால், இதுவரை நான் செய்ததே 'நான் நல்லிதயக்காரன்' என்று சொல்லிக்கொண்டு ஒரு பயல் முன்வராத நிலையை உண்டாக்கியிருக்க வேண்டும். இன்னும் எவனாவது மிச்சம் சொச்சமாக இருந்தால் அவனையும் அழித்தொழிக்க உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள நான் சிறிதுகூடத் தயங்கவேமாட்டேன்!" இவ்வாறு தனக்குள் உரக்கப் பேசிக்கொண்டு இறுமாந்து அமர்ந்திருந்தான் கொடுங்கரத்தான். அவ்வேளை,

"ஆண்டவனே, மோசம் ஆண்டவனே, மோசம்!" என்ற உரக்கக் கூவிக்கொண்டு வம்பளப்பான் என்பவன் ஓடிவந்தான்.

அவன் போட்ட கூச்சலைக் கேட்டுக் கொடுங்கரத்தான் திடுக்குற்று எழுந்து நின்றான். "என்ன, என்ன?" என்று கேட்பதற்குள் அவனுக்கு வாய் குழறியது. மெய் விதிர்ப்பெடுத்தது.

ஓடிவந்த வம்பளப்பானோ சொல்ல வந்த செய்தியை உடனே சொல்ல முடியாமல் தவித்தான். அவனுக்கும் நா குழறியது. உடல் நடுங்கியது.

"நாம் செய்த வேலைகள் எல்லாம் வீணாகிவிட்டன ஆண்டவனே! நம்

காரியம் கைகூடவில்லை ஆண்டவனே! அந்தக் கொடுமுடியிலிருந்து நான் எதற்காக என் எடுபிடி வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு ஓடோடி வந்தேனோ, எந்த வேலை கைகூட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு கடந்த ஒரு திங்களாக ஓரிடத்திலும் சற்று நேரங்கூடத் தங்காமல் சுற்றிச் சுற்றி உலா வந்தேனோ, அந்த வேலை கைகூடவில்லை ஆண்டவனே! நான் சொன்ன பொய்யெல்லாம் வீணாகிவிட்டது ஆண்டவனே! நான் எடுத்தெறிந்த பழிச்சொல் எல்லாம் திரும்பி வந்த ஏவுகணையாகி என்னையே தாக்கிவிட்டது ஆண்டவனே!"

"நீர் சொல்வது ஒன்றுமே புரியவில்லையே! சற்று விவரமாகத்தான் சொல்லித் தொலையுமேன்!"

"கொடுமுடிக்கு அனுப்பிவைப்பதற்குப் பேராளர் ஒருவர் தேவைப்பட்டாரல்லவா?"

"ஆமாம், நம் கொடுமுடி ஆண்டானின் கட்டளைதான் அப்போதே நிறைவேற்றப்பட்டுவிட்டதே!"

"எங்கே நிறைவேற்றப்பட்டுவிட்டது?"

"ஏன், உமக்குத் தெரியாதா? நான் செய்த முடிவு அதுதானே?"

"என்ன முடிவு செய்தீர்கள்?"

"என்னய்யா இது! சிறுபிள்ளை போல் பன்னிப் பன்னி ஒவ்வொன்றாகக் கேட்டுக்கொண்டு நிற்கிறீர்! இத்தனை நாள் நீரும் என்னோடு தானே சுற்றிக்கொண்டுவந்தீர்! என்னைவிட எதை எதையோ மிகப் பெரிதாக அளந்துகொண்டுவந்தீர்! இதோ பாரும் நம் கொடுமுடி ஆண்டானுக்குப் பிடித்தமான நம் எடுபிடித் தோழன் ஒருவனைத்தான் அங்கே அனுப்பிக் காரியத்தையே முடித்துவிட்டேனே! இப்போது அதைப்பற்றி என்ன பேச்சு?"

"நீங்கள் அனுப்பிவிட்டீர்களா?"

"ஆமாம்! — என்னய்யா இது! மூளை குழம்பிப்போய்விட்டதா உமக்கு?"

"இந்நேரம் மூளைதான் குழம்பிப் போயிருக்கவேண்டும்! எப்படியோ அதுநேராமல் சமாளித்துக்கொண்டு நிற்கிறேன். ஆனால், பட்டென்று நான் வந்த வேகத்தில் செய்தியை உங்களிடம் வெளியிட்டிருந்தால் இந்நேரம் உங்கள் மூளை கட்டாயம் குழம்பிப்போயிருக்கும்! உங்கள் சட்டை வேட்டியை எல்லாம் நீங்கள் கிழித்துக்கொண்டுவிட்டிருப்பீர்கள். என்மீது கல்லையெடுத்தும் எறிந்திருப்பீர்கள்! — ஆமாம் நீங்கள் அனுப்பிவிட்டேன் என்றீர்களே! எப்படி அனுப்பிவிடமுடியும் உங்களால்! மற்றவர்களின் ஒப்புதல் வேண்டாமா?–மக்களின் ஒப்புதல்!"

"என்னய்யா புதுமையான கேள்வி! என்றைக்குமே உம் மூளையிலோ உள்ளத்திலோ உண்டாகாத கேள்வி! மக்கள் ஒப்புதலாவது மண்ணாங்கட்டியாவது! மக்களில் எவனய்யாயோக்கியமானவன்இருக்கிறான்! எல்லாரும் வெள்ளிக்காசை அள்ளி யெறிந்தால் கள்ளனையும் வள்ளல் என்று கூறுகின்றவர்கள் தானே! இல்லாமலா நம்முடைய பரமகுரு இந்த மக்களைப் பார்த்து முட்டாள் பசங்கள், அறிவில்லாதவர்கள் என்று கூறிவிட்டு, அதே சூட்டோடு சூடாக அவர்களிடம் பணமும் திரட்டமுடிகிறது! அதனால் தான் நான் சொன்னால் முடிவு செய்துவிட்டமாதிரிதான் என்று சொன்னேன்! நம் எடுபிடித் தோழனை அங்கே அனுப்பிவிட்ட மாதிரிதான் என்று சொன்னேன்! மக்களுக்குத் தெரியாதா என்ன, என்னை எதிர்த்தால், என் விருப்பத்துக்கு மாறாக செயற்பட்டால் நடப்பது என்னவென்று!"

"நீங்கள் போட்ட கணக்குத் தப்புக் கணக்கு ஆகிவிட்டது ஆண்டவனே! வெள்ளிக் காசு வைத்திருப்பவர்கள் எல்லாம் வள்ளல்கள் என்று இதுவரை அவர்கள் படித்த பாட்டத்தை மாற்றிப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள் ஆண்டவனே!"

"வெள்ளிக் காசு கிடக்கட்டும்! அதிகாரம் ஆட்சி இவையெல்லாம் நம்மிடமிருப்பதுகூடவா அவர்களுக்குத் தெரியாமலிருக்கிறது? நம்முடைய தயவு இருந்தால்தான் அவர்களால் சலுகை பெறமுடியும் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா என்ன?"

"சலுகை! 'எல்லாருக்குமா சலுகை காட்டுகிறீர்கள்?' என்று திருப்பிக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள் அவர்கள். 'பத்துப் பேர் நீங்கள் சொல்வதைக் கேட்டால், உங்கள் விருப்பப்படி நடந்தால் அதில் இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து—அந்தப் பத்துப் பேரில் அவர்கள்தான் முன்னோடிகளா, அவர்கள்தான் அதட்டல் மிரட்டல் காரர்களா என்று ஆராய்ந்து தெரிந்துகொண்டு, அவர்களுக்குத் தானே உங்கள் சலுகையைக் காட்டுகின்றீர்கள், நல்லது செய்கின்றீர்கள்—அதுவும் எங்கிருந்தோ தனியே எடுத்துவந்தா அந்தச் சலுகையைக் கொடுக்கிறீர்கள்!—உங்கள் பேச்சைக் கேட்டு, உங்கள் வழி நடந்த, அதே சமயம் உங்கள் உள் நோக்கத்தையறியாத மற்ற எட்டுப் பேர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய நன்மையையெல்லாம் ஒன்று திரட்டித்தானே அந்த இரண்டு பேருக்கும் கொடுக்கின்றீர்கள்! இப்படி உங்கள் அதிகாரத்தையும், ஆட்சியையும் பயன்படுத்தி நீங்கள் நடத்திக் காட்டுகின்ற தவறான போக்கால் உங்களைப்போன்ற 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் மட்டுந்தானே வாழமுடிகிறது. எம்போலும் உள்ளது உள்ளபடி நடந்துகொள்வோர் உங்கள் வழி வந்தும், நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டும் கூட அடித்துப் பேசும் தன்மையும், வஞ்சக நோக்கும் இல்லாத காரணத்தால் நியாயமாகக் கிடைக்கவேண்டிய நன்மைகளையும் இழந்தல்லவா நிற்கவேண்டியிருக்கின்றது!' என்று அவர்கள் எதிர்த்துக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள் ஆண்டவனே!"

"ஆமாம், இவ்வளவும் அவர்கள் சொன்னார்களா? அல்லதுஅவர்கள் சொன்னதாக நீரே இட்டுக் கட்டிக் கொண்டு வந்து என்னை மிரட்டுகிறீரா?"

"அப்படியொன்றும் இல்லை ஆண்டவனே! என்மீது ஐயம் வேண்டாம் ஆண்டவனே! தீட்டிய மரத்திலேயே நான் பதம் பார்ப்பேனா என்ன? அந்த இட்டுக் கட்டும் வேலையைச் சொல்லிக்கொடுத்த உங்களிடமே பயன்படுத்துவேனா என்ன?வேண்டுமானால் அந்த நல்லிதயக்காரர்களை இழிவுபடுத்தவேண்டுமென்பதற்காகப் பலமுறை இட்டுக்கட்டியுள்ளேன். அதைத் தவிர உங்களுக்கு எதிராக நான் அந்த வேலையைப் பயன்படுத்த எண்ணியதே கிடையாது ஆண்டவனே!"

"என்னவோ நீர் சொல்வதை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. நீர் என்னை மீறிக்கொண்டு அந்தக் கொடுமுடிக்கு போனதும், அங்கே நம் ஆண்டானின் அடிகளிலே அமர்ந்துகொண்டு விட்டதும்

எனக்குப் பலவிதமான ஐயப்பாடுகளை உண்டாக்குகின்றன. அது போகட்டும். நீர் இப்போது சொல்ல வந்த செய்தியை இன்னும் சொல்லித் தொலைக்கவில்லையே! சட்டென்று சொல்லித் தொலையும்"

"ஆண்டவனே, அதை எப்படி ஆண்டவனே சட்டென்று சொல்வேன். நான் சட்டென்று சொன்னால் உங்கள் உள்ளம் ஒரு வேளை பட்டென்று நின்றாலும், நின்று விடுமே!"

"அதைப்பற்றி நீர் கவலையே படவேண்டாம். எனக்கு வேலைகளிருக்கின்றன. விரைந்து கூறித் தொலையும்!"

"மாற்றானின் பாதத்தில் வீழ்ந்து கிடக்கும் இந்த எடுபிடி எமக்கு வேண்டாம்! எமக்குத் தேவை மாற்றானை எதிர்த்து நிற்கும் வல்லான் என்றுகூறிக்,கொடுமுடிக்குப் போய் மாற்றானை எதிர்த்து நிற்க நல்லிதயக்காரர்களில் ஒருவனாகிய வல்லானையே........."

"வல்லானையே?"

"தேர்ந்தெடுத்து விட்டார்கள்! நம் எடுபிடியைத் திருப்பியனுப்பி விட்டார்கள் ஆண்டவனே!"

"ஆ, என்ன வார்த்தை சொன்னாய்! நம் எடுபிடியையா திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்று சொல்ல வந்தாய்! என்ன துணிச்சல் உனக்கு! என்ன செய்கிறேன் பார் உன்னை!" என்று பெருங்கூச்சல் போட்டுக்கொண்டு "ஏ வம்பளப்பான்! இன்றோடு தொலைந்தாய் நீ!" என்று போர்க்குரல் கிளப்பிக் கொண்டு வம்பளப்பான் மீது கொடுங்கரத்தான் அப்படியே பாய்ந்து அவனைக் கீழே வீழ்த்தித் தாக்கத் தொடங்குகிறான்.

தாக்குதல் பொறுக்கமாட்டாமல் வம்பளப்பான் குய்யோ முறையோ வென்று பேரொலி கிளப்பிக் கதறிக் கூவுகிறான். ஆங்காங்கே பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்களும், ஊழியர்களும் விரைந்தோடி வருகிறார்கள்! வம்பளப்பானைக் கொடுங்கரத்தானிடமிருந்து விடுவித்து விலக்கி விடுகிறார்கள்!

கொடுங்கரத்தானுக்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை. "டே வம்பளப்பான், உண்மையைச் சொல்! நம் எடுபிடியையா மக்கள் திருப்பியனுப்பிவிட்டார்கள்!"

"ஆம் ஆண்டவனே!"

"அந்த நல்லிதயக்காரர்களைச் சார்ந்த வல்லானையா மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்?"

"ஆம் ஆண்டவனே!"

"ஐயோ, மக்கள் எல்லாம் நல்லிதயக்காரர்களாகிவிட்டார்களா! அந்த நல்லிதயக்காரர்களில் முக்கியமானவர்களையெல்லாம் சிறையில் போட்டுப் பூட்டிவிட்டேனே. அங்கே அவர்களை அடி அடியென்று அடித்து நொறுக்கி நல்லிதயக்காரர்கள் என்று பேர் கேட்டாலே 'நானில்லை நல்லிதயக்காரன்' என்று சொல்லிக்கொண்டு அஞ்சி நடுங்கி மக்கள் எனப்பட்டோர் ஓட வேண்டியதொரு நிலையை உண்டாக்கியிருக்கிறேனே. இப்படிப்பட்ட நிலையிலேயே மக்கள் அந்த நல்லிதயக்காரர்களில் ஒருவனை — சிறிது கூட அஞ்சுதல் இல்லாமல்—ஏற்றுக்கொண்டுவிட்டிருக்கிறார்களே!

"அப்படியானால் அந்தப் பரணன், உள்ளமில்லாதானிடம் சொல்லியவையெல்லாம் உண்மைதானா? நல்லிதயக்காரர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்கள் என்று யாராலும் எளிதில் தேடிக் கண்டுபிடித்துவிட முடியாது! மாந்தர் கூட்டத்திடையே நல்லிதயக்காரர்கள் நீக்கமற நிறைந்து கிடக்கிறார்கள்! அவர்களை அழிப்பது யாராலும் முடியாத காரியம் என்று சொன்னானுமே! அவையெல்லாம் உண்மைதானா? நல்லிதயக்காரர்களை என்னால் அழிக்கவே முடியாதா! அழிக்கவே முடியாதா........."

கொடுங்கரத்தான் அப்படியே நினைவு தப்பித் தரையில் விழுகிறான். வேலையாட்கள் நாலைந்துபேர் விரைந்தோடி வந்து கொடுங்கரத்தானைப் படுக்கையிற் கொண்டுபோய்க் கிடத்துகிறார்கள். அதுதான் சமயமென்று வம்பளப்பான் மெல்ல நழுவித் தன் ஆண்டான் இருக்குமிடமாகிய கொடுமுடிக்கே ஓடிவிடுகிறான்,

7. ஏவிய கொடுங்கரம்

மயக்கம்போட்டு விழுந்த கொடுங்கரத்தான் திரும்பவும் நல்ல நினைவோடு மீளவே இல்லை. தப்பிய நினைவு தப்பியதாகவே முடிந்தது. எனினும் திடீர் திடீர் என்று படுக்கையினின்று எழுந்து நின்றான். யாரும் புரிந்துகொள்ள முடியாத

குழறுமொழியில் பெருங் கூச்சலிட்
டான். இடையிடையே புரிந்து
கொள்ளக் கூடிய சில சொற்களும்
அவன் வாயினின்று வெளிப் போந்
தன. அவை "ஐயோ, என்னை
விட்டுவிடு! நான் செய்ததெல்லாம்
தப்புத்தான்! இனி அப்படிச் செய்ய
மாட்டேன்! இனி எனக்கு ஆட்சியே
வேண்டாம்!" என்பவைதாம். அவன்
அருகிலேயே இருந்து அவன்
உளறிய ஒவ்வொரு சொல்லையும்
அவன் தவித்த தவிப்பையும் கூர்ந்து
கவனித்துக்கொண்டு வந்த மன
நூல் வல்லுநர் ஒருவர் கீழ்க்கண்ட
வாறு அவன் உள்ளத்தில் நிகழ்ச்சி
கள் தோன்றியிருக்க வேண்டு
மென்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஏற்கனவே அஞ்சுதல் நிறைந்த
தோற்றத் தினையுடைய உள்ளமில்
லான் பின்னும் பெரிய, கொடிய உ
வோடு ஏறத்தாழ ஓங்கி உயர்ந்
தொரு பனைமரத்தின் உயரத்தி
பரந்து படர்ந்து நிற்கும் ஆலமரத்
தின் கனத்தில் மலையொன்று
அசைந்து நகர்ந்து வருவதுபோ
கொடுங்கரத்தான் எதிரில் வந்
நிற்கிறான். திடீரென்று எதிரில் வந்
நின்ற அந்த உள்ளமில்லானை
பார்த்ததும் பெரும் விதிர்ப்போ
அஞ்சி நடுங்கிக்கொண்டு ஒரு மூ
யிற்போய் ஒண்டிக்கொள்கிறான்
கண்களை இறுக மூடிக்கொள்கிறா
கொடுங்கரத்தான். இறுக மூடி
கொண்ட பிறகும் அவன் கண்களி
அந்த உள்ளமில்லானின் கோர உ
வம் நன்றாகத் தெரிகிறது. அவ
கண்கள் பெரிய தீப்பிழம்புகளாக
தென்படுகின்றன. வாயில் இரண்
பக்கங்களிலும் காண்டாமிருகத்தி
கொம்பினைப்போல் மிகப்பெரி
நீண்ட கோரைப் பற்கள். மூக்
லிருந்து வெளிப்படும் மூச்சு, மூ
சாக இல்லை. வானில் விடப்பட்
பெரிய வாணங்கள் இரண்டிலிருந்
பின்னால் சிதறும் தீப்பொறிகள்
கவே இருந்தன. வாயிலிருந்
வெளிப்படும் மூச்சோ பெரு
நெருப்புக் கங்குகள் குவியல் குவி
லாக வெளிப்படுவது போன்
தென்பட்டன. தலையிலிருந்
இடுப்புவரை பெரிய பெரிய சடை
கள் இழிந்துகிடந்தன. அந்த
சடைகளின் ஒவ்வொரு நுனியி
பெரியதொரு மலைப்பாம்பு வாயை
திறந்துகொண்டுஎதிரில் நிற்போ
விழுங்கத் தாவுவதுபோல் தென்
டன. அவனுடைய கைகளே
கொடுங்கரம் என்ற பெயருக்கு
கண்கூடாகத் தென்படக்கூடி

எல்லாவிதமான கொடிய அமைப்புகளும் ஒருங்கே அமையப்பெற்றனவாக இருந்தன. அவன் பேசினான். அவன் குரல் உலகத்தில் எங்கும், யாரும் கேட்டே அறியாத மிகப் பெரிய கூச்சலாகவும், மிகமிகக் கொடிய கடூரம் நிறைந்ததாகவும் இருந்தது.

"ஏ, கொடுங்கரத்தான்! என்னை எல்லாரும் உள்ளமில்லான் என்று அழைக்கின்றார்கள். அந்தப் பெயர் எனக்கு ஓரளவுதான் பொருந்தும். ஆனால் உனக்கு அது முழுக்க முழுக்கப் பொருந்தும்! முழுக்க முழுக்கப் பொருந்தும்!

"ஏ, கொடுங்கரத்தான்! கண்ணை இறுக மூடிக்கொண்டால் உன்னை விட்டுவிடுவேன் என்று எண்ணிக் கொண்டாயா! விடமாட்டேன் உன்னை! விடமாட்டேன்! முன்னே எல்லாம் என்னை அதட்டிக்கொண்டு, மிரட்டிக்கொண்டு, பாய்ந்து கொண்டு ஓடிவந்தவன்தானே நீ! இப்போது ஏன் கண்ணை மூடிக் கொள்கிறாய்! உன்னால் ஏவிவிடப் பட்ட பூதம்தானே நான்! நீ சோறு போட்டு வளர்த்துவிட்ட பூதம்தானே நான்! ஏன் இப்போது அஞ்சுகிறாய்! என் பசிக்கு வேறு வழியில்லை! என் வெறிக்கு வேறு வழியில்லை! காட்டு! வேறு இலக்குக் காட்டு! இல்லையேல் உன்மீதே பாயப்போகிறேன்! பார்! பார்! இதோ பார்! உன்னுடைய கொடுங்கரம் என்னிடமிருக்கிறது! இந்தக் கொடுங்கரங்களுக்கு வேலை கொடு! இன்றேல் உன்னை அழிப்பதையே என் வேலையாக ஏற்றுக் கொள்வேன்!" என்று பெருங்கூச்சலோடு கூவிக்கொண்டு கொடுங்கரத்தானைத் தன் நீண்ட கொடிய கரத்தால் பற்றப் போகிறான் உள்ளமில்லான். அப்போது மூலையில் ஒண்டி ஒடுங்கியவண்ணம் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு நின்றிருந்த கொடுங்கரத்தான் அப்படியே தரையில் விழுந்து முகத்தை நிலத்திற் புதைத்துக் கொள்கிறான்.

அப்போதும் அவனை விடவில்லை உள்ளமில்லான்.

"ஏ, கொடுங்கரத்தான்! என்னைப் பார்ப்பதற்கே அஞ்சி நடுங்கிக் கொண்டு இப்படி முகத்தைப் புதைத்துக் கொள்கிறாயே நிலத்தில்! இப்போது எண்ணிப் பார்! நீ என்னை அந்த நல்லிதயக்காரர்கள் மீது ஏவி விட்டாயே பலமுறை, அந்த நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்! என்னைப் பார்த்தபோது அவர்கள் எப்படி அஞ்சி நடுங்கியிருப்பார்கள் என்று எண்ணிப்பார்! — இதோ இந்த — உனக்குச் சொந்தமான—கொடுங்கரங்கள் அவர்கள்மீது பட்டபோது அவர்கள் எப்படித் துடிதுடித்திருப்பார்கள் என்று எண்ணிப்பார்! அவர்கள் உனக்குச் சொந்தமான இந்தக் கொடுங்கரங்கள் வசப்பட்டு எண்ணமுடியாத பேரின்னலுக்கும், சொல்லவொண்ணாத கொடுவாதனைக்கும், மாந்தர் யாரும் நினைப் பிலும் கண்டிராத சித்திரவதைகளுக்கும், மிருகங்கள்கூடச் செய்யத் துணியாத பெருங்கோரங்களுக்கும் ஆட்பட்டபோது எப்படிக் கதறியிருப்பார்கள்! எப்படி வருந்தியிருப்பார்கள்! எண்ணிப்பார்! ஆனால், கொடுங்கரத்தான்! அவர்கள் உன்னைப்போல் கோழைகள் அல்லர்! என்னைக்கண்டு, நீ கொடுத்த இந்தக் கரத்தைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. உன்னைப்போல் ஓடி ஒளியமுனையவில்லை!

"ஏ, தீமையின் இருப்பிடமே! உலகக் கொடுமையின் பிறப்பிடமே! என்னை ஏவிவிட்ட அறியாமை என்னும் மௌடீகமே! எனக்கு வேலை சொல்! எனக்கு வேலை கொடு! இன்றேல் நீயே எனக்கு இரையாகிவிடு! இரையாகிவிடு!"

ஒவ்வொரு தடவையும் கொடுங்கரத்தான் படுக்கையினின்று எழுந்து பெருங்கூச்சல் போட்டுவிட்டுத் திரும்பவும் நினைவிழந்து படுக்கையில் விழும்போது இப்படிப் பட்டதொரு நிகழ்ச்சியின் இறுதிக் கட்டந்தான் அவன் உள்ளத்தில் ஓடியிருக்கவேண்டும்—என்று அந்த மனநூல் நிபுணர் கூறினர்.

8. எழுந்தது பரிதி

இரண்டு வாரங்கள் வரை நினைவு தப்பிக் கிடந்த கொடுங்கரத்தான் மெல்ல நினைவு பெற்று நடமாடத் தொடங்கியபோது அவன் நினைவுத் தெளிவை இழந்திருப்பதை எல்லாரும் கண்டனர். அதே நிலையில் அவன் புரிந்த அட்டூழியங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி தண்டனைகள் கொடுக்கவேண்டும் என்று மக்கள் மன்றம் ஒருமித்த முடிவினைச் செய்து செயலுக்கும் முனைந்தது. எனினும் கொடுங்கரத்தானின் நினைவுத் தெளிவின்மை அவனை மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது. இயற்கை அந்தக் கொடியோனுக்கு அளித்த அந்த ஒரு தண்டனையே போதும் என்று ஆன்றறிந்த பெரியோர்கள் சொல்ல மக்களும் அதனையேற்று ஒப்பம் தந்துவிட்டனர்.

அதோ பரணன் முதலான நல்லிதயக்காரர்கள் எல்லாம் விடுதலை பெற்றுவிட்டனர். அதோ மக்கள் வெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொண்டுவிட்டது. அதோ எல்லாரும் எழும் பரிதி காண்கின்றனர். அதோ ஒலி முழக்கங்கள்:

"வீழ்ந்தது கொடுமை!
எழுந்தது பரிதி!"

அதோ அந்த ஒலி முழக்கத்துக் கிடையே பரணன் பேசுகிறான்:

'ஆண்ட கொடுங்கரத்தார் ஆட்டிப் படைத்தனர். வேறு கொடுங்கரத்தார் இன்னும் வந்து தாக்குவர். பின்னும் விடுதலைக்குக் கொடுக்கும் விலையுளது. மன்னும் அதுவே விடுதலையின் பெருமதிப்பு.

*

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

வாழ நினைக்கவில்லை

—[மரு. பாண்டியன்]—

பிறப்பு எனும் கடலில் வீசி எறியப்பட்டான்.
வாழ்க்கை எனும் தோணியைப்பற்றினன்.
உலகம் அவனைப் பார்த்தவிதமும்,
காலம் அன்னவனைக் கண்டமுறையும்,
எங்கு கொண்டுபோய் இணைத்தது?

சுமார் பத்து ஆண்டுகள் இருக்கும், அவன் குடும்பம் சிறப்பான முறையில் உலகம் பாராட்ட வாழ்ந்தது. அவன் குடும்பத்தை நம்பி ஏராளமான குடும்பங்கள் இருந்தன. அவைகட்கு இவன் குடும்பம் உதவி அளித்தது. வாழ்க்கையில் வறுமையின்றி வாழ்ந்த குடும்பம், இன்று வாழ்வு நடத்துவது எப்படி என்ற தத்துவத்தை, தன் ஏழ்மையால் திரையிட்டது.

உலகத்தின் முகத்தில் அக்குடும்பம் சோலையில் பாலைபோல் காட்சி தந்தது. வாழ்க்கைப் பிடிப்புத் தளர்ந்தது.

தாய், தந்தை, மூன்று தமைக்கைகள், மூன்று தமையன்மார், இவர்களைப் பாதுகாக்கும் ஆற்றலை அடையாதவன், அதை அடையும் நிலைமைக்கு ஆக்கப்பட்டான். சிறிதும் பொருளின்றிப் பெரும் குடும்பத்தை கடையேற்றும் பொறுப்பில் இளைஞன் தேர்ந்தெடுக்கப்பட்டான். வாழ்க்கை எனும் தேருக்கு அச்சாணிபோன்ற பணத்தைச் சேமிக்க என்ன செய்வான்.

தமிழகத்தின் தலைசிறந்த நகரங்களுக்குச் சென்று வேலைக்கு அலைந்தான். கடைசியில் பட்டிணம் சென்றான். அங்கு வேலை கிடைக்கும்வரை ஏராளமான இன்னல்கள் அநுபவிக்க நேர்ந்தது.

பட்டிணத்துப் பெரியபொதுத்தபால் தந்தி இலாகாவில் போஸ்ட்மேன் உத்தியோகத்தில் அமர்ந்தான். சின்னாட்களில் அவன் அவ்வேலையை விட்டுவிட வேண்டிய நிலைமைக்கு உள்ளானான்.

பட்டினத்து விதிகளில் அலைந்தான். பொன்விளையும் பூமி எனப் போற்றப்படும் தமிழகத்தில் வாழ்க்கை புளித்தது. தெருக்களில் காட்சிக்காகக் கட்டப்பட்டிருந்த மாளிகைகளைக் கண்ணுற்று அவன் கண்ணீர் சிந்தினான். 'ஏழ்மையின் கோலம் இருக்கும் இடமெலாம் கண்ணீரின் பெருக்கும் கட்டாயம் இருந்தே தீரும்போலும்! வீதியில் நண்பனால் கொடுக்கப்பட்ட கடிதத்தைக் கண்டு, படித்தஉடன் தலை மயக்கம்கொடுத்தது. இரத்த அழுத்தம் குறைந்தது.

அழுதுகொண்டே தன்அறையை அடைந்தான். எண்ணங்கள் பல தோன்றின. அதிலே கீறல்களும் உண்டாயின. தள்ளாத வயதிலும் உள்ளத்தில் சிறிதும் சலனம் கொள்ளாமல், ஏகப்பட்ட கெடுதல்களையும் சமாளித்துத் தன் செல்வங்களை அழகான முறையில் வளர்த்து; பின் உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் திண்டாடியபடி, வாழ்ந்த அவன் தந்தை இறந்த சேதிதான் அது. இளம் வயதில் எவ்வளவு இன்பத்தில் வாழ்ந்தானோ, அதெல் வெறும் மாயை, மானிட வாழ்வில் என்ன இருக்கிறது. அற்பமான வாழ்வுதான் ஏன்? உலகின்கண் உள்ள எல்லா உயிரினங்களிலும் மனிதன் மேன்மையானவன் என்றாலும், இன்று அவன் கடைநிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டானே எனக் கதறி அழுதான்.

இனிமேல் என் குடும்பம் எப்படி வாழும்? ஒன்றும் அறியாத இளம் உடன் பிறந்தவர்களை எப்படி வாழ வைப்பேன்? என் வாழ்வும் சரியில்லையே என நெஞ்சில் ஆயிரமாயிரம் எண்ணங்களை எழுப்பி அரவணைத்து வெளியேற்றிக்கொண்டிருந்தான். அதிகாலை எழுந்தான்.

அக்கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்தான். அது ஒருமாதத்துக்கு முன் அனுப்பப்பட்ட கடிதமாக இருந்தது. இதுகாறும் கிடைக்காமல் இருந்தது, பிழையான முகவரியினால்தான். அவன் ஊர் பஞ்சாயத்தில் எழுத்தாளன் உத்தியோகம் ஒன்று இருப்பதாகவும், அந்த வேலையைப் பிடிக்கலாம், உடனே புறப்பட்டுவா எனவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

மறுநாள் அவன் தன் ஊரை நோக்கிப் புறப்பட்டான். அவன் உள்ளத்தில் ஏராளம் எண்ணங்கள் சுழன்றன. பின்னிப் பிணைக்கப்பட்ட வாழ்க்கையோடு இன்பம் காண முடியவில்லையே! எல்லாமே துன்பம்தானா. எழும்பூர் வண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டான். முதல் பக்கத்தை, எழுதி முடித்துவிட்டுத் தானாக மறுபக்கம் திறத்தல்போல வண்டியில் அமர்ந்த உடனே சிந்தனை, சிதறிக்கிடக்கும் பெரும் குடும்பத்தைச் சூழ்ந்தது.

தன் அன்னையின் சோகத்துக்கு எல்லைகள் இருக்காதே. அவள் என்னைக் கண்டவுடன் என்னதான் உரைப்பாள்? எப்படி அவர்கள் முகத்தில் தென்பட்டு, எம்முறையில் நடப்பேன்? தங்கைகள், தம்பிகள் இவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் அளிப்பேன். என்னைத்தானே அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பார்கள். இருளில் நிலவு தோன்றுவதுபோலல்லவா நான் அவர்கள் முன் தோன்ற வேண்டும். ஊரார் என்னைப்பற்றி என்ன எண்ணுவர்.

இவைகளையெல்லாம் எண்ணி எண்ணி நொந்துகொண்டான். நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். வண்டி வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தது. தன்னலமின்றி வேகமாய்ச் சென்ற அதன் தன்மையாய் மனிதர்கள் இல்லையே; என் வாழ்வு ஏழ்மைக்குச் செல்ல யார் காரணம்? 'பாத்திரம் பார்த்துப் பிச்சையிடாமை'! இதனால்தானே,

உலகத்தில், ஏன் போராட்டம், புரட்சி, சண்டைகள், சச்சரவுகள் உண்டாகின்றன? எல்லாவற்றிற்கும் காரணம் வாழ்வுப் பிரச்சினை தானே!

படித்தவர்கள்கூடச் சில நேரங்கள் பண்பிழந்து தடுமாறுகிருர்களே! அவர்களும் வாழ்க்கையில் இன்பமாக வாழ இயலவில்லையே என்றுதான்.

"ஏம்பா, நீ எங்கே பயணம்" பக்கத்தில் இருந்த நடுத்தரமான மனிதர் ஒருவர் கேட்டார். அவனேடு பத்துப் பேர் பயணம் செய்தார்கள் என்ருலும், அவர் இவனைக் கேட்பதில் பொருள் இருந்தது. இவன் சிந்தனைகளையும், அடிக்கடி புருவத்தை நெறித்தும், வெறித்தும், வெறுத்தும் பார்க்கும் தன்மையினுலுந்தான்.

"நான் திருநெல்வேலி போகிறேன்" என்ருன்.

"உன் பெயர்" மீண்டும் அம்மனிதர் மிகவும் விரைவாய்க் கேட்டார்.

"காத்தான்" என்ருன்.

"என் பெயர்தான் உனக்கும், நீ மிகவும் கவலையோடு செல்கிருய் போலிருக்கு, உனக்கு இவ்வயதில் துன்பக் கீறல் படரக் காரணம் என்னப்பா?" முகத்தில் சிறு களிப்புக் கொண்டுதான் துக்கம் விசாரித்தார்.

பக்கத்தில் அமர்ந்த ஒருவர் இவர்களின் வாதத்தில் கலந்துகொண்டார்.

"இந்தப் பையனை நான் எழுமூரிலிருந்து கவனிக்கிறேன். எவ்விதமான உணர்ச்சிக்கும் இடம் கொடுக்காமல் ஒரே சீராய் வந்துகொண்டிருக்கிருன். பையன்கள் எல்லாம் இப்பொழுது பெரியவர்களைவிட மிகவும் கவலைப்படுகிருர்கள்." இவ்வாறு பேசி முடித்ததும் தன்பையை எடுத்துக்கொண்டு மதுரை நிலையத்தில் இறங்கிச் சென்ருர்.

"ஆமாம், இப்பொழுதெல்லாம் இளைஞர்கள்தான் அதிகம் கவலைகளை மனதில் போட்டு வாழ்வைக் கெடுத்துக்கொள்கிருர்கள்," அவருடைய பேச்சை ஆமோதித்துப் பேசுவதுபோல பேசினுர்.

"உங்களுடைய கருத்துக்கு நீங்கள் என்ன விளக்கம் தருகிறீர்கள்" என்று பேச்சைத் தொடர்ந்தான் கன்னத்தில் கைவைத்த வண்ணம்.

"இதற்குப் பொறுப்பு அவர்கள் குடும்பத்தைப் பொறுத்தது. பெற்ரேர்கள் எண்ணத்திலும், உழைப்பிலும், கடமையிலும், வாழ்வு முறைகளிலும் இருக்கிறது" என்று பதில் கொடுத்தார்.

வண்டி மதுரையைக் கடந்தது. அவர் அளித்த பதில் அவனை உணர்வடையச் செய்தது. உலகம் அதைத் தெரிந்திருக்கிறது. இது போதும் என்று எண்ணினுன்.

அவன் பேசாமல் இருந்ததை எண்ணி அவர் முறுவலித்தார்.

"தம்பி ஏன் பேசாமல் இருந்துவிட்டாய்" என மீண்டும் பேசலுற்ருர்.

"உங்கள் கருத்துச் சரிதான்."

"ஆமாம் நீ ஏன் கவலையுள்ளவனுய் இருக்கிருய்"?

"நீங்கள் கூறியதுபோல நானும் அந்நிலமைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டேன். இளம் குழந்தைகளை விட்டு என் தந்தை இறந்துவிட்டார். உழைக்கத் திறன் இல்லாத தம்பி, தங்கைகள், அம்மா இவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு என்மேல் விழுந்துவிட்டது. எனது படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் கிடைப்பது அரிதாகியது. வேலை தேடிச் சென்னை சென்றேன். அப்பாவின் மரணம் கூறிக் கடிதம் வந்தது— செல்கிறேன்" என்று கூறி மளமளவெனக் கண்ணீர் உகுத்தான்.

"ஏனப்பா அழுகிருய், தைரியமாய் இரு. வாழ்வு உன் பக்கம். கலங்கியவர்கள் காலத்தைத்தான் நொந்துகொள்கிருர்கள். வரும் காலம் நன்மையாக இருக்கும், ஆமாம் உன் படிப்பு என்ன?"

"புதுமுக வகுப்பில் பெயில். அத்துடன் படிப்பும் முடிவு."

"இதுபோதும், இதோடு தன்னம்பிக்கை, விடாமுயற்சி துணிவு, உறுதி, இலட்சியம் இருந்தால் போதும்" என்று கூறினுர்.

தலையை அசைத்தவண்ணம் வெளியே பார்த்தான்; பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. வாழ்வு தான் தூங்கிக்கொண்டிருந்தது.

சிறு குழந்தை தலையணையில் படுத்துக்கொண்டு உலகத்தைப் பார்ப்பதுபோலப் பார்த்தான். வண்டி விருதுநகர் சந்திப்பை அடைந்தது.

"தம்பி, நானும் இவ்விதமான நிலமையில் சிறு வயதில் ஆக்கப்பட்டேன், ஆனுல் இன்று நான் சிறிது நிம்மதியாகத்தான் வாழ்கிறேன். என் வாழ்வுபோல் உன் வாழ்வும் இருக்கிறது. ஒன்றுதான் உனக்கு உரைப்பேன். எவ்விதமான சலனத்தையும் மனதில் ஏற்படுத்தி அல்லற்படாமல் இரு. தானே அமையும் வாழ்வு." என்று கூறிவிட்டு விருதுநகரில் இறங்கினுர்.

"அவருடைய அறிவுரை, வாழ்க்கைத் தோணியை நன்கு செலுத்தக் கிடைத்த துடுப்பாய் அமைந்தது என எண்ணினுன். எத்தனையோ பேர் என்னைப்போல நாட்டில் உள்ளனர் என்பதையும் நினைத்துக்கொண்டான். மீண்டும் அவன் குடும்பத்தைப்பற்றி எண்ணலானுன்.

வண்டிக்குள் புதியவர்கள் பலர் நுழைந்திருந்தனர். அவர்களை ஒருமுறை தன் கண்களால் வட்டமிட்டான். அவர்கள் இவனைப் பார்த்தனர். வண்டி கிளம்பியது.

மீண்டும் குடும்ப எண்ணம் தலைதூக்கியது. ஆதரவும், சிறிதும் பணமும் இன்றி இருக்கின்ருேமே என்று கவலை அடைந்தான். காலை 11 மணி இருக்கும் நெல்லையை அடைந்தான். தன்னுருக்குப் பயணமானுன். மருதூர் என்ற சிறு கிராமம். நெல்லையின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஊர்.

ஊர் எல்லையை அடைந்தவுடன், தாமிர பரணியின் உள்ளம் தனக்குள்ள குறையைத்தான் அளித்தது. தண்ணீர் வற்றியிருந்தது. அவன் எதிரே கரைமேல் பிணம் ஒன்று வந்துகொண்டிருந்தது. கண்டதும் கண் கலங்கினுன், யாராக இருக்கும் என.

பிணத்தைக்கொண்டு சென்றவர்கள், சுடலையில் இறக்கினர். வீடு சேர்ந்தபொழுது வீதியில் சென்றது பெற்றவள் பிணம் எனத் தெரிந்து கொண்டான். நெருப்பாகியது உள்ளம். "என்னை ஈன்ற தாயே! கணவன் மரணமானுன் என்று மக்களையும் நினைக்காமல் அவனுடன் சென்ருயே. நாங்கள் இனி எவ்வாறு வாழ்வோம்? பிழையின்றி எனை வளர்த்தவளே," என்று சுடலையை நோக்கி ஓடினுன். அன்னையின் பிணத்தைக் கண்டு கதறி வீழ்ந்தான். வெறும் மனிதனுக அவன்

அங்கு இல்லை. உலகத்தைத் திட்டினான். வாழ்வை வெறுத்தான்.

என்னைவிட உலகில் ஏக்கம் கொண்டவர்கள் உண்டா? தாயும் இல்லை. தந்தையும் இல்லை. இறுதிக் கடனை முடித்தான். இயந்திரம் போல் வீடு வந்தான். தன் தம்பி தங்கைகளுக்கு ஆறுதல் அளித்தான். இருந்ததைக்கொண்டு வாழ்வு நடத்தச் சொன்னான். நான் சம்பாதித்து அனுப்புகிறேன்—என்று கூறிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினான்.

எங்கு போவதென்று புரியாமல் நெல்லையில் வண்டி ஏறினான். வாழ்க்கை அத்தியாயம் புரண்டு கொண்டிருந்தது. புத்தர் கற்பித்த பாதையும், மகாத்மா கற்பித்த முறையும் அவனுக்குத் தெரியும். ஏழ்மைக்குப் பின்பு இலட்சாதிபதியாக மாறலாம் என்று உலகத்தில் சிலர் காணும் கனவும் தெரியும்.

கசக்கும் வாழ்வுதான் இனி என்று கண்டானே தவிர, சுவைக்க வகையில்லை என்பதை உணர்ந்திருந்தானே தவிர, எதற்குப் பிறந்தோம் என்பதை மறந்துவிட்டான். வாழத்தான் பிறந்தோம் என்பதை வாழ்க்கையின் கொடுமையில் நின்று பேசினால் நிம்மதி பிறக்குமா?

ஆறு சகோதர சகோதரிகளையும் நினைவில் கொண்டான். எங்கும் எப்படியும் வாழட்டும் எனக்கென்ன என்றான். யாருக்காகப் பிறந்தன? இறந்தால் என்ன? இருந்தால் என்ன? தனி ஒரு மனிதன் வாழ வழியில்லை, எனக்கு வாழ்வு ஏன்? நான் காப்பாற்ற, நான் உழைத்துச் சாப்பிட இன்னும் ஆறு பேர்!! எப்படி முடியும்? நினைத்தால் முடியுமா?

என் தகப்பன் எனக்கு அள்ளிக் கொடுத்தா சென்றார். என் தலையில் பெருஞ் சுமையை ஏற்றிவிட்டுச் சென்றாரே! என ஆங்காரமாகக் கத்தினான். பக்கத்திலிருந்த ஓர் அம்மா பதறிவிட்டார். தன் உணர்வு இல்லாமல் உளறுகிறேன் என்பதை உணர்ந்தவனாய் எழுந்து நின்றான். அன்று வண்டியில்அந்தப் பெரியவர் கூறிய வாய்மொழிகள் அவனைக் கண்டு பேசின; சிரித்தான். அது சிந்தி என்றது. அழுதான்; அழாதே உலகை நன்றாகக் கண்ணாடி போட்டுப்பார். உன்னைப்போல ஏராளம் உண்டு. இருக்கலாம். எனக்குப் பிடிக்கவில்லை. கோழையா நீ என்று கேட்டது. அந்தப் பெரியவர் மொழி; நீ கோழையா? ம்...... ஆம் நான் கோழையேதான். பயித்தியக்காரா, கோழைகள் கோடி வாழ நீ கும்மிருட்டில் இருப்பதாய்ப் புலம்பலாமா?மீண்டும்அம்மொழி பேசிற்று.

'வெறும் மொழிதானே?' என்றான்.

மொழிக்கு வலிமை உண்டு. முன்னேறி நடந்தால் தீமை.

உனக்கு நன்கு தெரியும். மீண்டும் நடக்காதே. ஊர் திரும்பு. இப்படித்தான் அம்மொழி உரைத்தது.

உணர்வு பெற்றான். பத்துப் பதினைந்து நாட்கள் இருக்கும். அவன் ஆந்திர நாட்டின் தலைநகர் ஹைதராபாத்தில் இருந்தான். அப்பொழுது ஊரும் உலகமும் பிரகாசமாய் இருந்தது. ஊர்வலமாய் மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். வாழ்வுப் பிரச்சினைகோரிப் பாட்டாளிகள் போராட்டம் நடத்தினர். அதில் அவன் மயக்கமுற்றான். மீண்டும் அவன் சுய உணர்வு பெறும்போது ஓர் மருத்துவமனையில் இருந்தான். அங்கிருந்து அவன் பெரிய மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கிருந்து விலங்கு பூட்டப்பட்டு வீதி வழி காரில் சென்றான்.கைதியானான். அவனைத் தூக்கில் போட்டனர். இது அவன் கண்ட கனவு இப்படியெல்லாம் நடந்தது.

ஆனால், உண்மையில் அவன் கேரளாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். காலை; பத்திரிகைப் பையன்இவனிடம் ஓடிவந்து, "நீ தமிழனா"? என்றான்.

"ஆம்," என்றான்.

"நான் பிறந்த ஊரில் ஒரு குடும்பத்தில் ஆறு பேர் மரணம், நஞ்சு அருந்தி" என்றான்.

"எந்த ஊர்" படபடக்கக் கேட்டான்.

"நெல்லை மாநகரின் அருகில் உள்ள மருதூர் கிராமம்."

ஆ! அப்படியா என்று கதறி அவனோடு சேர்ந்து விழுந்தான் தரையில்.

மறுநாள் அவன் உயிர் மறைந்தது. சோகச் செய்தியை கேட்ட தமிழ்ப் பையன் சொந்த ஊருக்குப் போனான். அங்கே இவனைப்பற்றிக் கூறினான். அவன் ஊர் அன்று துக்கத்தில் ஆழ்ந்தது. சீரோடு வாழ்ந்த குடும்பம் வாழ்க்கைத் தோணியின் ஆட்டத்தால், துடுப்பு முறிவால், உலகில் வீழ்த்தப்பட்டது. இந்தச் செய்தி கேட்டு தமிழகம் அதிர்ந்தது. உலகம் ஆ! என்றது. காத்தான் வாழ நினைக்கவில்லை.

★

திராவிடமெங்கும் பவனி செப்டம்பர் 17-ல்

★ கலங்கரை விளக்கம்—காஞ்சிக் கருவூலம்! ★

★ மாபெரும் படைக்குச் சொந்தக்காரன்! ★

★ மக்கள் தலைவன் வேலூர்ச் சிறையில் ★

★ உள்ளே இருந்தாலும் அண்ணன் ★

★ உள்ளக் கருத்தினைத் தாங்கி ★

வெளியே வருகிறான் செப்டம்பர் 17-ல்

"தலைவன்"

தி. மு. கழக வார ஏடு ★ ஆசிரியர்: தினகரன்

விவரங்களுக்கு:

31, பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு, ○ சென்னை-6.

வாணிகம் நடத்தக் கிழக்கிந்திய கம்பெனி என்னும் பேரால் வெள்ளையர்கள் இந்த நாட்டிலேஅடி யெடுத்து வைத்து, மெள்ள மெள்ள வளர்ந்து, இந்தியப் பேரரசை நிறுவுவதற்கு முன்னால், இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் பல சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள் என்பது வரலாற்றில் வெள்ளிடைமலை!

இத் துணைக்கண்டம் பல சிறு பிரிவுகளாகப் பிரிந்து, சிற்றரசர்கள், பேரரசர்கள், ஜமீன்தார்கள் முதலானோரின் நிர்வாகத்தின்கீழ் இருந்தது.

தந்தை அரசனென்றால் மகனும் அரசபீடத்தில் அமர்ந்துவிடுகிறான். வாரிசு முறையில் மகனுக்கு அப்பதவி தானே வந்துவிடுகிறது.

அரச குடும்பத்தில் பிறந்த குழந்தையை எதிர்காலத்தில் நாட்டை ஆளப் போகிறவன் என்ற முறையில் அரசியல் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதிலும் முக்கியமாக நாட்டை, அயலாரின் மண்ணாசையிலிருந்து காப்பாற்றப் போர் முறைகள் கற்பிக்கப்படுகின்றன.

முதலில் நாட்டைக் காக்கவேண்டும். இக் கடன் முடிந்ததும் மக்களுக்கு நீதியை நிலைநாட்ட வேண்டும். இதற்கான நீதிமுறைகள் கற்பிக்கப்படுகின்றன. நீதிமுறைகளை அறியச், கல்வி அறிவு தேவை. மன்னன் கல்விமானாகத் திகழ வேண்டும். அதற்கு எல்லாவிதமான கலைகளும் பயிற்றுவிக்கப்படுகிறது.

அரசன் அறிஞனாகத் திகழ்கிறான்.

அரச குடும்பத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளும், அதோடு அவனுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளும் சேர்ந்து அவனை நற்குண சீலனாக மாற்றுகிறது.

அரசன் முதுமை அடைகிறான்.

இளவரசனுக்குப் பட்டம் சூட்டப்படுகிறது.

கற்றறிந்த ஆசானாய், நீதி அறிந்த நீதிமானாய், நாட்டைக் காக்கும் காவலனாய்த் தன் கடமைகளை உணர்ந்து பணியாற்றத் தொடங்குகிறான்.

நாட்டிலே பசி, பிணி, கள்வர்களின் பயம் முதலிய தீய நடப்புகளுக்கு இடமில்லாமல் நாட்டைக் கட்டிக் காத்து வருகிறான்.

நல்லாட்சி புரியத் தனக்குத் துணையாக அறிஞர்கள் கொண்ட மந்திரி சபையை அமைத்து அவர்களுடன் ஆலோசித்துக் காரியமாற்றி வருகிறான்.

அக்காலத்தில் மன்னராட்சியில் மக்கள் மகிழ்ச்சியோடுதான் இருந்திருக்கிறார்கள். (மன்னராட்சியே தேவை என்பதல்ல.)

என்றாலும் கால வேகத்தில் நாட்டிலே பல மறுமலர்ச்சிகள் தோன்றின.

சமுதாயத்திலே மறுமலர்ச்சி!

அரசியலிலே மாறுதல்!

நாகரிகத்திலே நவீனங்கள்!

நடைமுறையிலே புதுமைகள்!

நிலப்பரப்பால் ஒன்றுபட்ட இந்தியத் துணைக்கண்ட முழுமைக்கும் பலதரப்பட்ட பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழ்ந்தார்கள் என்றாலும், முழுக்க முழுக்கப் புதுமையான பழக்க வழக்கங்களும், நாகரிகமும் கொண்ட வெள்ளையனின் வருகைக்குப் பிறகு அத்தனை துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின.

அவைகளிலே மிகமிக முக்கியமானது அரசியல் மாற்றங்களாகும்!

"முடிவு"

—மு. அதியமான்—

சின்னஞ்சிறு அரசுகளை எல்லாம் ஒன்றுபடுத்தித் தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தான்.

காலம் மாறியது! காங்கிரசாரின் கைக்கு நிர்வாகம் வந்தது.

மன்னராட்சி, மக்களாட்சியாக மாறியது.

பரம்பரைப் பழக்கமாக ஆண்ட நிலை மாறி எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகும் நிலை பிறந்தது!

அறிவுள்ளவனும்அரசோச்சலாம், அது அற்றவனும் ஆட்சிப்பீடம் ஏறலாம்!

கொலைகாரன் கொற்றவனாகலாம்!

கொடியவன் கோலோச்சலாம்!

கொள்ளைக்காரன் கொடியேற்றலாம்!

எப்படி? மக்களாட்சி! யாரை வேண்டுமானாலும் மக்கள் தேர்ந்தெடுக்கலாம்! இதுதான் நீதிமுறை!

நீதி நிலைக்கவேண்டுமானால், மக்களுக்குச் சிந்திக்கும் ஆற்றல்வேண்டும்!

சிந்திக்கும் ஆற்றல் வேண்டுமானால் அரசியல் அறிவு வேண்டும்!

அரசியல் அறிவு வேண்டுமானால், கல்வி அறிவு வேண்டும்!

இது இல்லாத நாட்டில் மக்களாட்சி, மாக்களாட்சிதான்!

மனிதன், மனிதத் தன்மையோடு நடத்தப்படமாட்டான்!

அறிஞன் அறவழியிலே செல்லத் தடைவிதிக்கப்படுவான்!

காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மாண்புள்ளவர்களாக இல்லாததாலாகும்! ஆட்சி புரிகின்ற அறிவு அற்றதாலாகும்! பொதுநலமின்றிச் சுயநலமிக்கதாலாகும்!

மன்னன் தன் குலப்பெருமை கெட்டுவிடுமே என்று பயந்து ஆட்சி நடத்துவான்!

ஆனால் மக்களாட்சியில் சுயநலமிகள் புகுந்தால், பதவியிலிருக்கும் காலத்தில் எப்படியாவது தன்னை வாழ்நாள் முழுமைக்கும் காப்பாற்ற வழிதேடிக் கொள்வார்கள்! யாருக்கும் பயந்து நடக்கவேண்டியதில்லை!

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள நிலை இதுதான்!

தமிழனுக்கு ஆளும் முறையைக் கற்றுக் கொடுக்கவேண்டியதில்லை! ஆண்ட பரம்பரையின் வழி வந்தவன்!

என்றாலும் அறவழியில் ஆட்சி புரியத் துணை புரியும் நீதி நூல் திருக்குறள் அழிந்துவிடவில்லை.

ஆட்சிப் பீடத்திலுள்ளவர்களுக்கு சந்தேகம் வரும்போது, நல்ல வழி காட்டியாக அமைந்து நல்லாட்சி நிலவ, அரிய பல கருத்துக்களையும், நீதி நெறிகளையும் கொண்டு திகழ்கின்றது.

கோலோச்சும் கொற்றவனின் கடமைகளை விளக்குகிறது!

சத்தான கருத்துக்களை முத்து முத்தாக அள்ளித் தெளிக்கிறது!

'நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன், நாடொறும் நாடு கெடும்!'

மக்களாட்சியின் முதலவனே, மந்திரியே! உன் கடமை என்ன?

நாட்டிலே மக்கள் விலைவாசி உயர்வால் வாழமுடியாது தத்தளித்துக் கொண்டுள்ளார்கள்!

கிணறு! குளம்! மூட்டைப் பூச்சி மருந்து! எலி நஞ்சு! இரண்டு முழக் கயிறு! ஓடிவரும் இரயில் எஞ்சின்! இவைகளை நாடி உயிர் அமைதி அடைய முற்படுகிறார்கள்!

விலைவாசியை குறைக்க முயற்சி எடுங்கள் என்று ஓர் இயக்கம், மக்

(16-ம் பக்கம் பார்க்க)

வேலொடு நின்றுரையும் விஞ்சியோர்

—[க. இராசன்]—

“உங்கள் விரலில் போட்டுக் கொண்டிருக்கின்றீர்களே மோதிரம் அதை இப்படிக் கொடுக்கின்றீர்களா?”

“ஏன்?”

“அதை நான் வாங்கிக்கொள்ளப் போகின்றேன்.”

“அதை நான் விற்கப் போவதில்லையே!”

“அதை நீங்கள் விற்கப்போகின்றீர்களோ, இல்லையோ அதைப்பற்றி எனக்கொன்றும் அக்கறை கிடையாது. நீங்கள் கொடுக்கின்றீர்களா, இல்லையா?”

“என்ன இப்படிக் கேட்கின்றீர்கள்......?”

“உம், உம். கொடுங்கள் இப்படி! இல்லை, — இதோ பார்த்தீர்களா!” என்று கால் சட்டைப் பையிலிருந்து கைத் துப்பாக்கியை எடுத்துக் காட்டிவிட்டுப், பின்னல் திரும்பி, கூடவே வந்திருக்கும் இரண்டு ஆட்களைப் பார்த்து “டேய் ஐயாவைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்களடா!” என்று ஒரு ஆள் கூறுகின்ருர். அது இக்கட்டான வேளை. அந்த இக்கட்டான வேளையைக் கருதி — அவரைச் சமாளிப்பதற்கு வேறு வகையில்லையே என்ற காரணத்தால் ‘சரி மோதிரத்தை விற்றுவிடலாம்’ என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்!

“இது நூறு ரூபாய்க்கு வாங்கிய மோதிரம்! சென்ற கிழமைதான் வாங்கினேன்! நூறு ரூபாய் கொடுங்கள்!” என்று மோதிரத்தைக் கழற்றிக்கொடுக்க மனமில்லாமல் எதிரிலிருப்பவரிடம் கொடுக்கின்றீர்கள்.

“ஓ, நூறு ரூபாய்க்கு வாங்கியதா! நான் அதற்கு 46 ரூபாய்தான் தருவேன்! கொடுங்கள் இப்படி!” என்று வந்த ஆள் உங்கள் கையிலிருந்த மோதிரத்தைப் பறித்துக்கொண்டு போய்விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

“உடனே காவல் நிலையத்துக்கு ஓடுவேன். அங்கே முறையீடு செய்வேன்! அவர்கள் என்னிடமிருந்து மோதிரத்தைப் பறித்துக்கொண்டு போன ஆளைத் தேடிப் பிடிப்பார்கள். என் மோதிரத்தை என்னிடம் திருப்பிக்கொண்டு வந்து கொடுப்பார்கள்” என்றுதானே நீங்கள் சொல்ல வருகிறீர்கள். அதுதான் நடக்காது.

*

சென்ற கிழமை தென்னகத்துக்கு வருகை தந்திருந்த தில்லிப் பேரமைச்சர், துணைக் கண்டத்து நிதியமைச்சர் மொரார்சி அவர்கள் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிருர். மக்களிடம் தேங்கிக் கிடக்கின்றதாம் தங்கம். அதை அரசு தன் திட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படும் வகையில் கைப்பற்றிக் கொள்ளப் போகின்றதாம்! ‘அதை எப்படிக் கைப்பற்றப் போகின்றீர்கள்? என்று செய்தியாளர் கேட்டதற்கு, ‘கைப்பற்றப் போகும் வழி, வகையைப் பற்றியோ, விதத்தைப்பற்றியோஇப்போதைக்கு ஒன்றும் வெளியிட முடியாது. அப்படி வெளியிட்டால் எங்கள் திட்டமே ஒருவேளை சீர் குலைந்தாலும், குலைந்துவிடும்’ என்று சொன்னுராம். அதே மூச்சோடு கேள்வி கேட்ட செய்தியாளர் போட்டுக் கொண்டிருந்த மோதிரத்தைச் சுட்டிக் காட்டி “அந்த மோதிரத்தை நீங்கள் கொடுத்துவிட முன்வருவீர்கள் அல்லவா? உங்களுக்கு எங்கள் திட்டத்தின் நோக்கம் நன்ருகத் தெரியும்” என்ருராம். மேலும், அரசு அப்படிக் கைப்பற்றப் போகும் தங்கத்திற்கு அனைத்துலக மதிப் பின்படிதான் விலை கொடுக்குமாம். உள்நாட்டு மதிப்பின்படியுள்ள விலை கிடைக்காதாம். அதாவது ஒருவரிடமிருந்து ரூபாய் நூறு மதிப்புள்ள தங்கத்தை அரசு கைப்பற்றுமானல், அதற்கு அரசு தரப்போவது ரூபாய் 46 (நாற்பத்தாறு) தான்.

மேலும் ஒன்றையும் சொல்லியிருக்கிருர் கனம் மொரார்சி. ‘ரூ 4000 கோடிக்கான தங்கம் முழுவதையும் அப்படியே பெற்றுவிட முடியாது’ என்று.

பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தைக்கைப்பற்றக்கூடாது என்று நாம் வாதிக்க முன் வரவில்லை. அனைத்துலகச் செலாவணி நிறுவனத்தின் விதிமுறைகளுக்கிசைய இழப்பீடு தருவது பற்றியும் நாம் முரண் கூறவில்லை. ஆனல்,

யார் யாரிடமெல்லாம், எங்கெங்கெல்லாம் அந்தத் தங்கம் உண்மையளவில் பதுக்கல் பொருளாகத் தேங்கிக் கிடக்கின்றதோ, அவர்களிடமிருந்தே, அங்கிருந்தே, அந்தத் தங்கம் முதலில் வெளிக் கொணரப் படவேண்டும் என்பதே எம் நோக்கம்.

கனம் மொரார்சியின் குறிப்புகளைப் பார்க்கும்போது பதுக்கப்பட்டுக் கிடக்கும் தங்கம் பதுக்கப்பட்டே கிடக்கட்டும். எதிரில், கண்ணுக்குத் தென்படும் தங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு விடலாம் என்ற நோக்கம் இருக்குமோ என்ற அச்சமும், ஐயமும் நடுத்தர மக்களை, இப்போதே அலைக்கழிக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஏழை எளியோர் எனப்பட்டோர், சாமானிய நிலையிலுள்ளோர், அவர்கள் மொழிப்படி ‘வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி’ தங்கள் சிறிய வருவாயில் சிறு சிறு சில்லறையாகச் சேர்த்து வைத்து, அந்தச் சிறு தொகையைக்கொண்டு பொன்னுலான அணிகலன்கள் வாங்கி பெரும்பான்மையர் வைத்துக்கொள்கிருர்கள்; சிறு பான்மையர் — அணிந்து கொள்கிருர்கள். அப்படி அவர்கள் அணிகலன்கள் வாங்குவது சிறுபான்மை அணிந்து மகிழ்வதற்கே என்ருலும், பெரும்பாலும் அவசர காலங்களில் விற்ருே அடைவு வைத்தோ தங்கள் இடரைப் போக்கிக் கொள்ளலாம், தேவையை நிரப்பிக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடுதான்.

தங்கம் வைத்திருப்போராக எடுத்த எடுப்பில் தென்படக் கூடிய வர்களும் இத்தகையார் தாம். இவர்களில் பத்தாண்டுகளுக்கு முன்போ, தங்கத்தாலான அணிகலன்கள் வாங்கியோராயிருப்போர் அருமை. எல்லாரும் ஐந்தாண்டுக்கு முன்போ, ஓராண்டுக்கு முன்போ, ஒரு திங்களுக்கு முன்போ, ஒரு கிழமைக்கு முன்போ தங்கத்துக்கு உள்நாட்டிலுள்ள இன்றைய விலையில் வாங்கியோராகத்தான் இருப்பர்.

இத்தகையாரிடம் — அதாவது நூறு ரூபாய் போட்டு வாங்கியோரிடம் அந்தப் பொருளை நாற்பத்தாறு ரூபாய்க்குக் கோருவது பச்சையாகச் சொல்ல வேண்டுமானுல் கொள்ளைச் செயல் என்றுதான் சொல்லவேண்டும்.

அது ஒரு புறமிருக்க, இன்றைய

துணைக் கண்டத்துக் காங்கிரசு அரசு—பொருள் நூல் விற்பன்னர் களும், அரசியல் நிபுணர்களும் பல படியாக எச்சரிக்கை செய்தும் கேளாக் காதினராய், கண்மூடித் தனத்தோடு இவர்களின் கடந்த 15 ஆண்டுகால ஆட்சிக்குள் — பண வீக்கத்தை எவ்வளவு தூரம் பெருக்கி விபரீத நிலைக்குக்கொண்டு வந்திருக்கிறது என்பதையும் இன் றைய நிலையில் தங்கத்துக்குள்ள அனைத்துலக மதிப்பும், இந்தத் துணைக் கண்டத்து மதிப்பும் பாமர ரும் தெள்ளென அறிந்து கொள்ளு மாறு விளக்குகின்றன.

இனி ஏழையரையும், நடுத்தர நிலையினரையும் பாதிக்காத வகை யில், அவர்கள் செந்நீரும், கண்ணீ ரும் கொட்டி, அரும்பாடுபட்டுச் சேர்த்திருக்கும் சேமிப்பு, அடாவடி முறையன்னதொரு முறையில் பறிக் கப்படாத வகையில் நாட்டிலுள்ள தங்கம் கைப்பற்றப்படுமானால் அதை முதலில் வரவேற்பது யாமே யாம்.

எத்தனையோ மடாலயங்கள் உள் ளன. எத்தனையோ வேறு ஆலயங் கள் உள்ளன. அவற்றில்—அரும் பொருட் களஞ்சியத்தில் வைப்ப தற்கு ஏற்றன அல்லாத தங்கத்தா லான அணிகலன்களையெல்லாம் அரசு கைப்பற்றலாம்.

ஆனால் கனம் மொரார்ஜியின் குரல், இந்த முறையில் அவர் செயல் படுவார் என்று நாம் எதிர்பார்க்கும் வகையில் ஒலிக்கவில்லை.

அவர், அறவழி மறியலில் ஈடுபட்ட கழகத் தோழர்கள்மீது கண்மண் தெரியாத, காட்டுமிராண்டித்தன மான, அடக்குமுறையினை அவிழ்த்து விட்ட, ஏவிவிட்ட தமிழக அரசிற்கு எப்படிக் கண்ணை மூடிக்கொண்டு —தாமும் அதே வெறிப் போக்கில் வாழ்த்துக்கள் கூறியிருக்கின்றாரோ, அதே போக்கில்தான் இந்தச் செய்தி யிலும்—மேற்கூறிய தங்கம் கைப் பற்றும் செயலிலும் — தம் கண் ணோட்டத்தைச் செலுத்துவாரோ என்று ஐயுறுகிறோம்!

'கூடுதல் வரி வாங்குதற்காகக் கோலோடு வருகின்ற அரசினையே வேலொடு நின்றான்,' என்று வள்ளு வப் பெருந்தகை கூறியுள்ளார் என்றால்,

இந்த வேலொடு நின்றாரையும் விஞ்சி நிற்கும் கொடுங்கோலரை எவ்வாறு குறிப்பிடுவதோ!

★

பண்டைத் தமிழர் அகவாழ்வு

—[வெ. தியாகராசன்]—

ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம் தமிழ் இலக்கிய வரலாற் றின் பொற்காலமெனப்படும் சங்க காலமாகும். அந்நாளில் தமிழர் தம் வாழ்வு சீர்மைபெற்றுத் துலங்கி யது. வள்ளுவரின் வாய்மை, இளங் கோவின் தவநெறி, நக்கீரனின் துணிவு, பாரியின் கொடை, காரிள் வீரம், கரிகாலனின் ஆட்சிமுறை, ஔவையின் உயர்வு ஆகிய எண் ணிறந்த சிறப்புக்களைச் சங்க இலக் கியங்களில் காணமுடியும். தமிழர் தம் வாழ்வினைத் 'தமிழ் நலமே' வளப்படுத்தியது.

"ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக் குக் கடனே"

என்றார் புலவர் பொன்முடியார். தமிழ்த் திருநாட்டின் நலம் நாடி, போர்க்களம் புகுந்து, யானையை வீழ்த்தி விழுப்புண் பெற்று வருதலே தமிழ் மகனின் கடனெனக் கருதப் பட்ட காலமது. புறத்தில் போரைப் போற்றிய அவன், அகத்தில் இன்பத்தை முழுதும் மாந்தி மகிழ்ந் தான். தமிழரின் வாழ்வே அகம், புறம் என்ற இரண்டினுள் அடங்கிய தாகும்.

இதயம் கலந்த காதல், சாதி, சம யத்தை நோக்காது; பட்டம், பதவி யைப் பாராது; உயர்வு, தாழ்வை உணராது; ஏழ்மை, செல்வத்தை ஏற்காது, அழகும் அருங்குணமும் இயைந்த வீரத்தலைவனையே தலைவி விரும்புவாள். அஃதேபோல் தலை வனும் தனக்குரிய தலைவியைத் தேர்ந்தெடுப்பான்.

இங்ஙனம் கருத்தொருமித்த காத லர் மறைமுகமாகச் சின்னாள் இன் பம் துய்ப்பர். பிறர் அறியாமல் ஒழுகும் இவ்வொழுக்கமே கள வொழுக்கம் எனப்படும். பின்னர் தலைவன், தலைவியை மணம் புரிய வேண்டிப் பொருள் நாடிப் பிரிய முற் படுவான். தான் விரும்பும் தலைவிக் குத் தன் உழைப்பினால் ஈட்டும் பொருளைக்கொண்டே அணிகலன் பூட்டி மணக்க விழைவதை அற னெனக் கொள்வான் தலைவன். பரிசம் பொருள் விழைந்து செல்லும் இப்பிரிவே, வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்" என்னும் பெயர் பெற்றது. செல்வக் குடி யில் பிறந்த செல்வந்தனாக இருப் பினும், பெற்றோரின் பொருளைக் கொண்டு மணவினை முடிப்பதை இழிவெனக் கொள்வான் அவன். தன்மானம் கொண்ட தமிழ் நெஞ் சம் சுய முயற்சியால் பெறும் பொருளைக்கொண்டே பரிசம் தர விரும்பியது. அதன்கண் பிரிய மறுக்கும் தன் உள்ளத்தைக் கல் லினும் கடிதாக்கிக்கொண்டு கரு மமே கண்ணாகப் பிரிவான் தலைவன். இன்றைக்குப் பெண்ணை மணக்கப் பேரம் பேசும் இழிதகை நிலை பண் டைய தமிழர் வாழ்வில் எங்கணும் காணமுடியாத புதுமையாகும்.

இப்பிறவியில் மட்டுமின்றி எத் தனை பிறவிகள் எடுப்பினும் தன் காதலனையே கருத்தில் நிறுத்த விழையும் தமிழ் மகளிரின் காதல் உள்ளத்தைச் சொல் கொண்டு அளவிடுதல் இயலாது. தலைவி யொருவள் தன் தோழியிடம், "பிரிவு நோய் என் உயிரையே கொள்ளைகொண்டு போய்விடும் போலிருக்கிறதே, தோழி, யான் இறப்பைக் கண்டு அஞ்சுகிறேன் என எண்ணாதே, சாதலுக்கு அஞ் சேன். ஆனால், இறந்த பிறகு மறு பிறப்பு எடுத்தால் இத்தலைவனை மறந்து விடுவேனோ என்றே அஞ்சு கிறேன்" என்று கூறி வருந்தினாள் என்ற செய்தி நற்றிணையில் நனி மிகக் கூறப்படுகிறது.

இத்தகைய காதலுள்ளம் தலை வனை மிக உயர்வுடையதாகவே மதிக்கும், அவனைக் குறித்துக் குறை நினைக்கவே அவளுடைய நெஞ்சம் புண்படுகிறது. "பிரியேன், பிரியினும் தரியேன்" என்று சூளுரைத்த தலை வன் இன்று பிரிந்ததுமன்றித் திரும்ப வரவும் காலம் கடத்துகிறானேஎன்று தோழி தலைவனைக் குறைகூற, அது பொறுக்காத தலைவி, "குன்றுகநன் னுடன் வாய்மையிற் பொய்தோன் றிற் றிங்களுட்டித் தோன்றியற்று" என்று கூறும் சொற்கள் அவளது அன்பின் முதிர்ச்சியையும், உறுதி யையும் தெற்றென வெளிப்படுத்து கின்றன. அஞ்சுவ தஞ்சும் அறி வுடையோன் என்னுடைய காதலன் என்று கூறுமளவிற்கு அவளது காதல் நம்பிக்கையை ஊட்டிற்று. தான் விரும்பிய தலைவனுடன் கூடி, இன்பத்திலும் துன்பத்திலும் அவனு டன் இணைந்து வாழும் வாழ்வே வாழ்வாகுமென அவள் கருதினாள்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தலைவியின் காதலுக்குச் சற்றும் குறைவில்லாமல் தலைவனிடத்தும் காதல் தழைத்திருந்தது. காதலுக்காக வீர நெஞ்சமுடைய அவன் மெல்லியலாள் முன் பணியவும் தயங்கான். இதையே வள்ளுவரும்—தலைவியின் காதல் நெஞ்சத்துள் சிக்கிய தலைவன், தன் உள்ளத்தைப் பார்த்து, "போர்க்களத்தில் பகைவரும் அஞ்சுதற்குக் காரணமான என் வலிமை, இவளின் ஒளி பொருந்திய நெற்றிக்கு அழிந்துவிட்டதே!"

"ஒன்றுதற்கு உடைத்ததேர்
ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும் என்பீடு"

என்று கூறியதாகப் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் மிளைப் பெருங்கந்தன் என்னும் சங்ககாலப் புலவர் பாடிய பாட்டொன்றை ஈங்குசுவைப்போம்.

வேட்டையின் பொருட்டுக் காட்டிற்குச் சென்ற தலைவன், இடையிலே தலைவி ஒருத்தியைக் கண்டான். உருவினாலும் திருவினாலும் இருவரும் ஒத்தவர்கள். கண்டதும் காதல் அரும்பியது. கண்ணொடு கண் — நோக்கின. தலைவியோ பருவத்தால் இளையவள். தலைவன் தடந்தோள்காளை. ஆயினும், அவன், அவள் கண் வலையிலே சிக்கி வருந்தினான். பாம்பு குட்டியாயினும் அதன் கடியால் யானை நஞ்சேறப் படுவதுபோல் பின்பு களவொழுக்கத்தில் ஈடுபட்டு இன்பம் துய்த்தனர். இப்படி நாட்கள் பல நகர்ந்தன. பிரிவு ஆற்றாத பெருந்துயரால் தலைவன் உடல் மெலிந்தான். அதனைக்கண்ட தலைவனின்தோழன் "தமிழின் துறைவாய் நுழைந்தனையோ தண்ணங் தலைவா?" என்று கேட்டுவிடுகிறான். தமிழ்மொழியின் பயிற்சிக்காலம் போலில்லை அன்று. மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது, தீமையும் மேற்கொள்ளாது வருந்தி உழைத்தால்தான் தமிழ்ப் புலமை கைவரும். எனவேதான் உடல் மெலிந்து, கண் குழிந்து, பொலிவு இழந்து நின்ற தலைவனைப் பார்த்த தோழன் மேற்கண்டவாறு வினவினான்.

தோழனிடம் உண்மையைமறைப்பது அழகல்ல. வெளிப்படையாகச் சொல்லவும் முடியவில்லை; நாணம் தடைபோட்டது. நடந்ததை உள்ளடக்கிக்கொண்டு, "மான்முடிக் கண்ணியிலேபட்டது என்சிந்தனை!" என்றான் தலைவன். ஈங்கு தலைவன் சொன்ன மான் பெண்மான்தான் என்பது தோழனுக்குத் தெரியாதா என்ன!

உண்மை தெரிந்த தோழனுக்குத் தலைவனின் செயல் கொஞ்சமும் பிடிக்கவில்லை. பருவம் நிரம்பிய ஆடவன் ஒருவன், எளிய பெண்ணின் திறத்திலே சிக்கி இப்படி உள்ளத்தை மெலியவிடலாமா என்பது அவன் கருத்து.

எனவே, "நண்பா! பெருந்தோளன் அல்லவா நீ. தோள் வீரம் படைத்தவன் இப்படி ஒரு சிறுமியின் கண் பார்வையுள் பட்டழிந்தது தகுமா? அது உன் வீரத்திற்குப் பேரிழுக்கன்றோ? மேலும், "மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளன்" என்றல்லவா பிறர் ஆடவர்களைப் புகழக் கேட்டிருக்கிறேன். அப்படியானால் பெண் ஒருத்திதான் உனது தோளழகு கண்டு மனம் அழியவேண்டும். நிற்க, நீ மெலிந்ததின் பொருத்தம் புரியவில்லையே" என்று தலைவனைப் பார்த்துக் கேட்டான் தோழன்.

காமம் தன்னையறியாமல் வந்து பிடித்தாட்டும் பேயுமல்ல, உடன் பிறந்தே கொல்லும் நோயுமல்ல. இடையிலே வந்து இறுதியிலே பிரிந்து செல்லும் ஒருவகை உணர்ச்சி அது. அதனை இயல்பறிந்து விலக்கும் அறிவு ஒழுக்கம் பெற்றால், எவரும் அது நீங்கித் துன்பின்றி இருக்கலாம் என்பது தோழனின் தனிப்பட்ட கருத்து. அதனைத் தலைவனுக்கு விளக்கவந்த தோழன்,

"காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே
நினைப்பின்,
விருந்தே காமம்: பெருந் தோளோயே"

என்று முடிவுகட்டிக் கூறினான்.

இத்தோடு முடித்துவிட்டான் தோழன் என்று சொல்லவும் முடியாது. காமம் என்பது வாழ்விடையே வந்துபோகும் ஒருபுதுமைஉணர்ச்சி. அதிலே இன்ப நிறைவு இல்லை. இருப்பதாகக் கொண்டால், நம் நினைவைப் பொறுத்ததே அது" என்றெல்லாம்—மேலும் சொல்லிக்கொண்டே போகும் தோழன்,

"முதைச் சுவல் கலித்த
முற்றா இளம் புல்
மூதா தை வந்து ஆங்கு"

என்று கிழட்டு மாட்டை வேறு உவமை காட்டிப் பல கருத்துக்களைத் தொடர்ந்து விளக்கினான்.

இங்ஙனம் எத்துணையோ இனிய பாடல்கள் நமது சங்க இலக்கிய நூல்களில் உள்ளன. தமிழரின் தனிப்பண்பு—அவர்தம் அகவாழ்வுச் சிறப்புக்களை எடுத்தோதும் அறிவுக் கருவூலம் இலக்கியம். தமிழ்ப் பற்று பெருகிவரும் இந்நாளில்—தமிழர்கள் தவறாது இவைபோன்ற நூல்களில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று விளங்கவேண்டும். இதற்கு அரசும், தமிழ்த்தலைவர்களும்ஆவன செய்தல் தலையாய கடனாகும்.

●

13-ம் பக்கத் தொடர்ச்சி

களின் குரலை மந்திரிகளின் காதுகளில் ஒலிக்க வைக்கிறது!

நடவடிக்கை எடுக்காவிடில் அமைதியாக அறப்போர் துவங்குவோம் என எச்சரிக்கிறது!

ஆட்சிப்பீடமே! என்ன செய்கிறாய்?

அறப்போரை அடக்கிவிடலாம் என்று கருதுகிறாயா?

ஆட்சி புரியும் நம்மை யார் என்ன செய்யமுடியும் என எண்ணுகிறாயா?

அடக்குமுறையால் ஒடுக்கிவிடலாம் என்று நினைத்திருக்கிறாயா?

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன் கதி என்ன? ஆட்சியை இழப்பான்!

நாட்டிலே நடக்கும் நல்லவை கெட்டவைகளை ஏன், எதற்குஎன்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

அதற்கான பரிகாரம் என்ன என்று யோசித்து முறையோடு செயல்பட வேண்டும்.

இதை விடுத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்குமுறையால் ஒடுக்கிவிட முனைந்தால்...?

ஆட்சிப்பீடமே! உலகத்துக்கே நீதி போதிக்கும் உத்தமன் வள்ளுவனின் எச்சரிக்கையை ஏற்றுக் கொள்!

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.